விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 013 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 16 திங்கட்கிழமை (01.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





## வாக்காளர் பதிவு இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த பதிவு நடவடிக்கைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கபடவிருந்தது.

எனினும், 2024 இல் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் இடம்பெறவுள்ளதன் காரணமாக அந்த நடவடிக் 04




## கொள்ளையடிக்கப்பட்ட பணம் மீளப் பெறப்படும்

### ஐ.ம சக்தியின் ஆட்சியில் நடக்கும்



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் திட்டமிட்ட அடிப்படையில் மூடிமறைக்கப்பட்ட வழக்குகள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. 15

### ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தரப்பு

# தனித்துப் போட்டியிட்டால் அது அவர்களுக்கே கேடு!

### நீதி அமைச்சர் விஜயதாஸ கருத்து



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டிணைந்து பொது வேட்பாளரை களமிறக்குவதோ அல்லது தேர்தலை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிப்பதோ நாட்டிலுள்ள ஒட்டுமொத்த தமிழர்களையும் பிளவுபடுத்தும் செயலாகவே அமையும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## இன்று முதல் வற் வரி




02ஆம் பக்கம் பார்க்க

## அரச நிறுவனங்களில் புத்தாண்டு வரவேற்பு

(கொழும்பு)

புத்தாண்டின் தொடக்க நாளான இன்று அனைத்து அரச ஊழியர்களின் பங்கேற்புடன் அரச நிறுவனங்களில் புத்தாண்டு வரவேற்பு நிகழ்வுகள் இடம் 15

## உடைந்தது பொதுஜன பெரமுன மலர்கிறது புதிய கூட்டணி



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மீது அதிருப்தியடைந்த ஆளும் கட்சி உறுப்பினர்களின் புதிய மாற்று அரசியல் கூட்டணி இன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இது குறித்து புதிய கூட்டணியின் செயற்பாட்டுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரபிரியதர்ஷன யாப்பா ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டையும் மக்களையும் நேசிக்கும் தலைவரை உத்தேச ஜனாதிபதி 15

## ஜனாதிபதி ரணில் யாழ்.வருகிறார்



(கொழும்பு)

இம்மாதம் 4ஆம் திகதி நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

இதற்கமைய ஜனாதிபதி யாழில் தங்கியிருந்து தொடர் சந்திப்புக்களை மேற்கொள்ள 15

## பாதாள உலகக் குழுவினரை பொலிஸார் காப்பாற்றுகின்றனர்

### புலனாய்வுத்துறை அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

புலனாய்வுத் திணைக்களத்தால் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட அறிக்கையின் படி, பாதாள உலகக் குழுவினர் மற்றும் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் பொலிஸ் அதிகாரிகள், சிறைச்சாலை அதிகாரிகள் என சுமார் இரண்டாயிரம் அரச அதிகாரிகள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலைமை மாற்றப்படும் வரை 15

## அனைத்துப் பாடசாலைகளும் இனி மாகாண சபைகளின் கீழ்

### சாதாரண தரம் 10இல்; உயர்தரம் 12இல்

(கொழும்பு)

கல்விச் சீர்திருத்தங்களின் பிரகாரம் அனைத்துப் பாடசாலைகளையும் மாகாண சபைகளின் கீழ் இயங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக கல்விக்கான துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, தேசிய மற்றும் மாகாண பாடசாலைகள் என இருவகையான பாடசாலைகள் இனி பேணப்படாமல், கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் பாடசாலைகளின் மேற் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 24 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ளமுடியும்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18427)

**077 468 3354, 071 173 3911**


## மரண அறிவித்தல்

### லோகநாதன் சபேஸ்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட லோகநாதன் சபேஸ் அவர்கள் நேற்று முன்தினம் (30.12.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் லோகநாதன் - சாரதாதேவி தம்பதியரின் அன்புப் புதல்வனும் வசந்தராசா - மகாலட்சுமி (நாவற்குழி) தம்பதியரின் அன்பு மருமகனும் மயூரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சதீஸ், தாட்சாயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஜீவன் (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு மைத்துனரும் அங்கயன், தர்ஷணன் அவர்களின் அன்பு மாமனும் மதுஷன், மதுஷா அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


தகவல்: குடும்பத்தினர்

நீர்வேலி வடக்கு.

(18459)

## மரண அறிவித்தல்

மலர்வு 21 - 10 - 1928



உதிர்வு 29 - 12 - 2023

### நல்லதம்பி தாமோதரம்பிள்ளை

( அரசடி டச்சுறோட், அளவெட்டி மேற்கு, அளவெட்டி. )

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி தாமோதரம்பிள்ளை அவர்கள் கடந்த 29.12.2023 (வெள்ளிக்கிழமை) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, தெய்வானைப்பிள்ளை, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகரத்தினம், நாகபூசணி, நாகலோசினி, புஷ்பலோசினி (கனடா), முருகதாஸ், சிவதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தி, Dr.ஈஸ்வரன் (ஆயுள்வேத வைத்தியர்), தவச்செல்வம் (ஓய்வு நிலை தாதிய உத்தியோகத்தர்), மன்மதராஜன் (கனடா), ரதி, சுஜீவா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் திவாகரன் (தொழிலதிபர்), சமிகா, சுயானா - இரதீஸ்காந்த் (லண்டன்), நீலாகரன் - இருசா (லண்டன்), துஷ்யந்தி - சத்தியநீபன் (கனடா), தர்சிகா - ரமேஷ் (கனடா), ததுர்சனி - பவனீதரன், அயந்தன் - சுகந்தினி, தேனுகா - அருணன், கௌரிசங்கர் (லண்டன்), ஜஸ்மினி, விசாலினி, பிரவின், அஜய் (கனடா), நிருஜா, கிதுஜா, ஸ்ரீராம், வினேஷ் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் கனியா, லிசாந், திரேஷ், ஷக்சனா, பிரித்திகன், ஹர்சனா, திஸ்வின், காவ்யா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.01.2024) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

077 604 7567

## அனைத்துப்...

பார்வை மற்றும் நிர்வாகம் மாகாண சபைகளுக்கு மாற்றப்படும் வகையில் சீர்திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்தரம் ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் பாடசாலைகளை நடத்துவதற்கும், நான்கு வருடங்களுக்கு ஒருமுறை இத்திட்டத்தை மேம்படுத்துவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், உயர்தரம் 12ஆம் தரத்துடனும், சாதாரண தரம் 10ம் தரத்துடனும் கொண்டு வரப்பட்டு, ஒரு பிரதான பாடசாலையைச் சுற்றி அமைந்துள்ள 08 பாடசாலைகள் ஊட்டப்பாடசாலைகளாகப் பராமரிக்கப்படும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் வி.ராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, தரம் 6 முதல் ஆங்கிலத்தை கட்டாயமாக்குவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. முதலாம் வகுப்பில் இருந்து ஆங்கிலத்தை கட்டாயமாக்குவதற்கு முதலில் முன்மொழியப்பட்டதாகவும், அவ்வாறு செய்தால் தாய்மொழி மாணவர்களிடம் இருந்து அந்நியப்பட வாய்ப்புள்ளதாகவும் குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதாக கூறப்படுகிறது. (ந-7)


## பிரத்தியேக வகுப்பு

தரம் 6 - 11 வரையான கணித பாட (தமிழ் மொழி மூலம்) பிரத்தியேக வகுப்பு கற்பித்துக் கொடுக்கப்படும்.

(18464)

**077 538 6405**


## இன்று...

வற் வரியை அதிகரிப்பதற்காக கடந்த 11ஆம் திகதி கொண்டுவரப்பட்ட சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் படி, இதுவரை 15% ஆக இருந்த வற் வரி, இன்று முதல், 18% ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் இதுவரை வரி விதிக்கப்படாத 97 பொருட்கள் மற்றும் சேவைகளுக்கும் வற் வரி அமுலாகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


## உரிமையாளர் இடமாற்றம்





கோண்டாவில் ஸ்ரேசனடி இரண்டாம் (2) இலக்க கடையில் இயங்கிய உரிமையாளர்

**நல்லையா உதயகுமார்** (பெரியதம்பி)

ஆட்டிறைச்சிக் கடை கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடைக்கு மாற்றப்பட்டுள்ளது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஆரம்பம் : 01.01.2024

(18417)

தொ.இல. : 077 085 6479


## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 03.12.2023 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்

### கோபால் புவனவதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியையும் ஆத்மசாந்தி வழிபாடும் நாளை 02.01.2024 செவ்வாய்க்கிழமை பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

"புவனகிரி"
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(C-8059)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பால்

## திண்டாட்டத்தில் மக்கள்





(கொழும்பு)

**உணவுப்பொருட்கள் சிலவற்றின் விலைகள் இன்று முதல் அமுலாகும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.**

அந்த சங்கத்தின் தலைவர் ஹர்சன ருக்ஷான் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

இதன்படி, பால் தேநீர் ஒன்றின் விலை 10 ரூபாவினாலும் சாதாரண தேநீரின் விலை 5 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொத்துரொட்டி மற்றும் ப்ஃரைட் ரைஸ் ஆகியவற்றின் விலை 25ரூபாவினாலும் சிற்றுண்டி உணவுகளின் விலை 10 ரூபாவினாலும் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்சன ருக்ஷான் தெரிவித்தார்.

அதேவேளை முச்சக்கர வண்டி கட்டணம் உயர்வும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி முதல் கிலோமீற்றரில் கட்டணத்தில் மாற்றம் இல்லையெனவும் இரண்டாவது கிலோமீற்றருக்கு கட்டணம் 80 ரூபாவிலிருந்து 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (5-6)

# 17.5 வீதமான பிள்ளைகள் கல்வியை மட்டுப்படுத்தியுள்ளனர்

## புள்ளிவிபர திணைக்களம்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக கல்வித்துறை மிக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மார்ச் 2022 முதல் நாடு முழுவதும் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத் தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


3 முதல் 21 வயதுக்குட்பட்ட 54.9 வீதமான பெண்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வியை முற்றாக இடைநிறுத்தியவர்கள் 2.1 வீதம் எனவும் திணைக்களத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, 3 முதல் 21 வயதுக்குட்பட்ட பெண்களின் கல்வியில் நகரப் பகுதியில் 54.2 வீதமும் கிராமப் புறத்தில் 55.1 வீதமும் பெருந்தோட்டப் பகுதியில் 55.1 வீதமும் தடைப்பட்டுள்ளது.

அத்துடன், இந்நாட்டில் 17.5 வீதமான பிள்ளைகள் கல்வியை மட்டுப்படுத்தியுள்ளதோடு கல்வியை முற்றாக இடைநிறுத்தியவர்களின் 2.1 வீதமாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இது 2023 பொருளாதார நெருக்கடியின் தாக்கம் குறித்த குடும்ப ஆய்வு என்று பெயரிடப்பட்டுள்ளதோடு, கல்வி, வேலைவாய்ப்பு, தனிநபர் வருமானம், குடும்ப வருமானம், செலவு, உடல்நலம் மற்றும் குடும்ப அலகுகளின் கடன் ஆகிய ஏழு தலைப்புக ளின் கீழ் கணக்கெடுப்பு நடத்த ப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 10.01.1966 மறைவு : 01.01.2008

திரு.

## தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்
யாழ்., கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)

அன்பின் அப்பாவே!
அசைக்க முடியாத நம்பிக்கையே
அழைத்து விட்டாரே ஆனந்த கூத்தன்
ஆண்டுகள் பதினாறு ஆகியதோ !
நேற்றுப் போல் உள்ளதே
எங்களை விட்டு சென்ற பொழுதுகள்
ஏன் தான் நம் வாழ்வில் வந்தது.....
உங்கள் கனவுகள் சுமந்து
நாங்கள் உயர்ந்து விட்டோம் அப்பா!
எங்கள் உயர்வுகளை கண்டு களிக்க
எங்களுடன் நீங்கள் இல்லையே....
நித்தமும் ஒளிரும் நட்சத்திரமாயிருந்து
உயர்ந்திடும் எம் வாழ்வினை
ஆசீர்வதியுங்கள் அப்பா!!!

பிள்ளைகள்
பவதாரணி (மகள்), பிரணவன் (மகன்), பவித்திரா (மகள்)

தகவல்:- திருமதி.விஜயகலா மகேஸ்வரன்
இல.32, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.தொலைபேசி : 011 2360679
இல.276, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 2221877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு

எமது பாடசாலையில் சேவையாற்றி
30.12.2023 சனிக்கிழமை அன்று ஓய்வு பெற்ற எங்கள் ஆசிரியை

## திருமதி ராகினி தயாபரன் அவர்கள்

( பயிற்றப்பட்ட சைவசமயம் )



சேவைக்காலம்
ஆசிரியர் பணியில் 23.11.1989 - 30.12.2023

சேவை விபரம்

- வ/செட்டிகுளம் ம.வி
  1989.11.23 - 1993.03.03
- யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
  1993.03.04 - 1994.12.31
- வ/செட்டிகுளம் ம.வி
  1995.01.01 - 1999.04.26
- யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்
  1999.04.27 - 2001.09.18
- யா/சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை
  2001.09.19 - 2002.02.28
- யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலை
  2002.03.01 - 2014.01.16
- நாவாந்துறை றோ.க.வி
  2014.01.17 - 2023.12.30



தனது 60 தாவது வயதில்
34 வருடகால ஆசிரியப்
பணியில் இருந்து
30.12.2023 சனிக்கிழமை
ஓய்வுபெற்ற ஆசிரியையின்
அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன்
இவரது ஓய்வுக்காலம் சிறப்புற மனமுவந்து
வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

(18466)


# 650 விக்கெட்டுகள் வீழ்த்தி ஸ்டார்க் சாதனை




அவுஸ்திரேலியாவின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மிட்செல் ஸ்டார்க் சர்வதேச கிரிக்கெட்டில் 650 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 5 விக்கெட் (2 மற்றும் 3) வீழ்த்திய ஸ்டார்க், 2 ஆவது டெஸ்டின் முதல் இன்னிங்சில் விக்கெட் ஏதும் வீழ்த்தவில்லை. 2 ஆவது இன்னிங்சில் 4 விக்கெட் வீழ்த்தினார்.

இதன்மூலம் ஒட்டு மொத்தமாக சர்வதேச கிரிக்கெட்டில் 263 போட்டியில் 651 விக்கெட்டுகள் சாய்த்து சாதனை படைத்தார். சர்வதேச போட்டியில் அவரது சிறந்த பந்துவீச்சு 28 ரன் கொடுத்து 6 விக்கெட் சாய்த்ததாகும். 23 முறை ஐந்து விக்கெட்டுகளையும் இரண்டு முறை 10 விக்கெட்டுகள் சாய்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## வாக்காளர் பதிவு...

கைகளை துரிதப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ந-7)

## தனித்துப் போட்...

கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் தமிழ் அரசியல் கட்சிகள் புதிய தேசிய அரசியல் கூட்டணியையும்,

இன, மத, மொழி பேதமற்ற வேட்பாளரையும் அடையாளம் கண்டு அதில் பங்கேற்பதே சிறந்த அரசியல் சாணக்கியமான நடவடிக்கையாக அமையும்.

அவ்வாறு இல்லாது விட்டால் ஒட்டு மொத்தத் தமிழர்களையும் பிளவுபடுத்தும் செயற்பாடாகவே அது அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், வடக்கு, கிழக்கு தமது பூர்வீகமான பிரதேசம் என்ற நிலைப்பாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் தமது பிரதேசத்தினை மையப்படுத்தியதாக ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கோ அல்லது தேர்தலை மக்களின் ஆதரவுடன் புறக்கணிப்பதற்கோ முழுமையான உரித்தினைக் கொண்டிருக்கின்றன.

ஆனால், யதார்த்த நிலைமைகளைப் பற்றி அக்கட்சிகள் சிந்திப்பது தான் மிகவும் அவசியமானதாகின்றது. வடக்கு, கிழக்கினை மையப்படுத்திய பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டால் அந்த வேட்பாளருக்கு வெறுமனே அப்பகுதிகளில் தான் ஆதரவு கிடைக்கும்.

வடக்கு,கிழக்குக்கு வெளியில் உள்ள தமிழ் மக்கள் ஆதரவளிக்காத நிலைமையொன்று ஏற்படுவதற்கே அதிகமான சாத்தியப்பாடுகள் உள்ளன.


மறுபக்கத்தில், தமிழ் கட்சிகளின் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறப்போவதில்லை.

அவ்வாறு பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டதன் பின்னர் தேசிய கட்சிகளின் சார்பில் களமிறங்கும் வேட்பாளர் ஒருவர் வெற்றி பெற்றால் அதன் பின்னர் அசௌகரியத்துக்குள் உள்ளாகப்போவதும் தமிழ் மக்கள் தான்.

ஆகவே அதுபற்றியும் தமிழ்க் கட்சிகள் கரிசனை கொள்வதே பொருத்தமானது என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். (ந-7)

# மரண அறிவித்தல்

பிறப்பு
19 - 03 - 1961



இறப்பு
31 - 12 - 2023

## சரவணமுத்து வரதராசா

சாவகச்சேரி பெரியமாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து வரதராசா அவர்கள் நேற்று (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் சந்திரராசா (ஓய்வு நிலை முகாமைத்துவ உதவியாளர் - தென்மராட்சி கல்வி வலையம்), சிவராசா, அற்புதராணி, கௌரீசன் (ஆசிரியர் - கிளி/பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜெயராணி, சகுந்தலாதேவி, காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் சிவலதா (ஆசிரியை - கிளி/பளை R.C.T.M.S) அவர்களின் பாசமிகு மைத்துனரும் யதீசன், யபோசன், சுஹேசினி, காருசன், கஜானனன், சாம்பவி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் தர்மிகா, பிறையினி ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் சாளினி, நாகபூஷணி, செவ்வேள், மயூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.01.2024) திங்கட்கிழமை அவரது அண்ணன் சந்திரராசா (அல்லாரை) அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் எறியான்பிட்டி இந்து மாயனத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அல்லாரை தெற்கு,
மீசாலை.

சந்திரராசா - 077 365 6907
சிவராசா - 076 850 4354
கௌரிசன் - 077 329 1685

தகவல்:
சகோதரர்கள்

(C-8060)


# சிறிராம் ஜுவல்லர்ஸ்

இல. 158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான
மாபெரும் விலைத்தள்ளுபடி.




- செய்கூலி, சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
- வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 15.01.2024 வரை விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.

ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்

- அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலைவரத்தின் படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.


077 165 1729, 077 773 0567,
021 222 8334

(C-8058)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆண்டில் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடைய வேண்டும்

## ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தி



(கொழும்பு)

2024 இல் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய, நாம் தொடர்ந்து முன்னேற வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல சவால்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் மத்தியிலேயே நாம் 2024 புது வருடத்தை ஆரம்பிக்கிறோம். நம் நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும்.

கடந்த காலங்களில் நீங்கள் செய்த அர்ப்பணிப்புக்கள் மற்றும் துயரங்களைத் தாங்கிக் கொண்டதன் பலனாக நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கான அடிப்படைக்கட்டமைப்பை உருவாக்க எம்மால் முடிந்துள்ளது.

எனவே பிறந்திருக்கும் இந்த ஆண்டு அனைவருக்கும் வெற்றிகரமான ஆண்டாக அமைய வாழ்த்துக்கள் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

# பிரதித் தலைவர் பிரச்சினையால் சிக்கலில் சஜித்-டலஸ் கூட்டணி

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலை மையப்படுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பரந்துபட்ட கூட்டணியை அமைப்பதற்குக் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்தக் கலந்துரையாடல்களின்போது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலை மையப்படுத்தி அமைக்கப்படுகின்ற ஐக்கிய மக்கள் சக்தியை தலைமைத்துவமாகக் கொண்ட கூட்டணியின் பிரதித் தலைவர் பதவி டலஸ் அழகப்பெருமவுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவோ, அக்கட்சியின் ஏனைய சிரேஷ்ட தலைவர்களோ விரும்பவில்லை.

கூட்டணியில் பிரதித் தலைவர் பதவியைக் கோரி முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்கள் நெருக்கடிகளைச் சந்தித்திருந்த நிலையில், தேசிய அமைப்பாளர் பதவியை டலஸ் அழகப்பெருமவுக்கு வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி விருப்பம் தெரிவித்துள்ளது.

எனினும், இதனை டலஸ் அழகப்பெரும விரும்பாத நிலையில் கலந்துரையாடல்களில் பங்கேற்காமல் உள்ளார்.

ஆனால், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் தொடர்ந்தும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# பிலியந்தலையில் வெடிப்புச்சம்பவம்

(கொழும்பு)

பிலியந்தலை - மாவித்த புரவில் வீடு ஒன்றில் இயங்கிய சட்டவிரோத பட்டாசு உற்பத்தி நிலையத்தில் வெடிப்பு சம்பவம் பதிவாகியுள்ளது.

குறித்த விபத்தானது நேற்று காலை ஏற்பட்ட நிலையில், நிலைய உரிமையாளர் மற்றும் அவரது இரு பிள்ளைகள் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் காயமடைந்தவர்கள் களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 750 | 400 | 650 | 700 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1700 | 1200 | 1500 | 1800 |
| தக்காளி | 600 | 650 | 900 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 150 | 150 |
| கோவா | 450 | 400 | 550 | 600 |
| கரட் | 520 | 450 | 900 | 1000 |
| பூசணி | 180 | 160 | 180 | 240 |
| புடோல் | 300 | 300 | 250 | 350 |
| வாழைக்காய் | 240 | 200 | 240 | 300 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | 600 | 500 |
| பெரிய வெங்காயம் | 450 | 440 | 550 | 500 |
| பாகற்காய் | 800 | 800 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 350 | 250 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 500 | 400 | 450 | 600 |
| லீக்ஸ் | 350 | 380 | 550 | 600 |
| பீற்றூட் | — | 600 | 600 | 800 |
| கறிமிளகாய் | 600 | 700 | 700 | 900 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 600 | 450 | 600 | 700 |
| கத்தரிதம்புள்ள | 600 | 300 | 300 | 600 |
| கீரை - 1 பிடி | 180 | 150 | 150 | 250 |
| தேசிக்காய் | 800 | 500 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 600 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 900 | — | — | — |
| முள்ளங்கி | 200 | 200 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 200 | 180 | 120 | 200 |

# இராசிபலன்

01.01.2024
மார்கழி 16, திங்கட்கிழமை
பஞ்சமி பிற்பகல் 01.52மணிவரை

மகம் முற்பகல் 8.28 மணிவரை
சுபநேரம் -12.29-01.59 மணிவரை
இராகுகாலம்-7.59-9.29 மணிவரை

உலக சமாதான தினம்
சந்திராஷ்டமம்
திருவோணம்.

வளவன்

**மேஷம்**: தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்**: பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொலைதூரத்திலிருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**துலாம்**: இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்**: உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**: தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்**: குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்

**விருச்சிகம்**: பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள் உறவினர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்**: புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்**: வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர் வழியில் ஓர் அழைப்பு கிடைக்கும், முயற்சிகள் கைகூடும்.

**கன்னி**: வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், தொழில் சம்பந்தமான பயணங்கள் இடம்பெறலாம், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு**: மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும், தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறும்.

**மீனம்**: உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியம் சீராகும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீச்சு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - புத்தூர் கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் வீட்டிலுள்ளவர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாதோர் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலில் வீட்டின் முன்பகுதி சேதம் அடைந்துள்ளதுடன் வீட்டில் உள்ளவர்கள் வெளியே வந்தபோது தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(5-6-33)

# நாவற்காடு வீதி புனரமைப்பு



(அக்கராயன்)

முல்லைத்தீவு முள்ளியவளை வடக்கு நாவற்காடு வீதி நேற்று முன்தினம் புனரமைக் கப்பட்டது. நாவற்காடு கிராமத்தில் இருந்து 400 வரையான குடும்பங்கள் முள்ளியவளை முல்லைத்தீவு பகுதிகளில் உள்ள வைத்தியசாலை, பாடசாலைகள், சந்தைகள் என்பவற்றை பயன்படுத்துகின்ற வீதியானது அண்மையில் பெய்த மழையின் போது வீதியினை குறுக்கறுத்து வெள்ளம் பாய்ந்ததன் காரணமாக வீதியில் பெருங்குழி ஏற்பட்டிருந்தது.

இக் கிராம மக்கள் கரைதுறை பற்று பிரதேச சபை யின் முன்னாள் தவி சாளர் க.விஜிந்தனிடம் தெரியப்படுத்தியதை அடுத்து பிரதேச சபையினரின் உதவியுடன் குறித்த பெருங்குழி நேற்று முன்தினம் மூடப்பட்டு நாவற்காடு மக்கள் போக்குவரத்து செய்யக் கூடிய முறையில் வீதி புனரமைக்கப்பட்டுள்ளது.(5-6-350)

"மாற்றத்தை நோக்கிய பயணத்தில் ஒன்றிணைந்த நாம்" எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் மலையகம் 200 நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

(படம்-தேவானந்தன்)



# யாழ். மாநகர சபையின் பவளவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் பவள விழா,மாநகர சபை தினம் மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான கடமைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நிகழ்வு என்பன இன்று யாழ். மாநகர சபை முன்றலில் காலை 9 மணிக்கு யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு அரியாலை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களும், சித்த ஆயுள் வேத வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் இணைந்து விசேட மருத்துவ முகாம் ஒன்றினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (5-6)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையில் ஆண்டு தோறும் இடம் பெற்று வரும் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு இல.66, கல்லூரி வீதியில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (5-6)

# பூநகரியில் கத்திக்குத்து
## பெண் ஒருவர் படுகாயம்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி வலைப்பாட்டில் கணவனால் கத்தியால் வெட்டப்பட்டு படுகாயமடைந்த நிலையில் பெண்ணொருவர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5 மணியளவில் புநகரி வலைப்பாட்டில் இடம் பெற்றுள்ளது. போதையில் இருந்த கணவனள் மனைவியுடன் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் மனைவி மீது கத்தியினால் தலையிலும் கழுத்திலும் வெட்டி உள்ளார்.

படுகாயமடைந்த பெண் அயலவர்களின் உதவியுடன் பல்லவராயன்கட்டு சந்தி வரை கொண்டு வரப்பட்டு பின்னர் அவசர அம்புலன்ஸ் மூலம் யாழ். [illegible] ள்ளார். (5-6)


NORTH LANKA IIT CITY CAMPUS

Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna Tel: 0767504535, 0778849677

மாபெரும் புலமைப்பரிசில் - 2024

ரூ. 15,000/= இலிருந்து ரூ. 50,000/= வரை அள்ளிச் செல்லுங்கள்

பதிவுகளுக்கு முந்துங்கள்


இறுதித் திகதி : 14.01.2024

U.G.C. அங்கீகாரம்

பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

British Qualfication Certificate course - duration - 1 year

Computer Science
Agriculture Science
English Language (IELTS)
Business Management
Political Science
Physical Education & sports



Diploma – 1-2 years


Computer Science
Agriculture Science
English Language (IELTS)
Political Science
Physical Education & sports
Business Management

Advance Diploma – 1-2 years

Computer Science
Agriculture Science
Physical Education & sports (for sports coachers)
English Language
Political Science
Business Management

Degree programmes (Top -up) – 1 year

Computer Science
Agriculture Sciences
B.Ed.
Business Management (BBA)
BA in English
BA in Political Science
Physical Education & sports
BSc in Nursing (A/L 3 Passes), LLB 3 years (A/L 3 Passes or Any Degree 2 years)



Master Degree – 1 year

MSc in Computer Science
MSc in Agriculture Science
M.Ed,
MBA
MA in English
MA in Political Science

M.Sc in Physical Education & sports

IELTS - Courses

Doctor of Philosophy (PhD) (Education, philosophy,

[c-8057]

| Branches | Director | Registrar |
|---|---|---|
| Vavuniya : | | |
| Kilinochchi : | 0767504535 | 0778849677 |
| Mannar : | 0767504535 | 0778849677 |
| Trincomalee: | 0767504535 | 0778849677 |
| Batticaloa : | 0767504535 | 0778849677 |
| Kurunagala : | 0767504535 | 0778849677 |
| Kandy : | 0767504535 | 0778849677 |
| [illegible] : | 0767504535 | 0778849677 |
| Hatton: | krishna - 0771697722 | 077802999 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புதிய ஆண்டில் புதுமனிதர்களாக எம்பணி தொடர்வோம்

அன்பர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான புத்தாண்டு வாழ்த்துக்கள். காலம் வேகமாகக் கடக்கிறது. மனிதர்களாகிய நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு இறைவன் பல வழிகளைத் தந்துள்ளான். மனித வாழ்வில் நாம் சாதிக்கக் கூடியவை ஏராளம். நல்ல விடயங்களை சாதித்த மனிதர்கள் நமக்கு உதாரணமாக விளங்குகிறார்கள். எனவே நாம் முயற்சியுடையவர்களாக திகழ வேண்டும். 2023 விடைபெற்று விட்டது. 2024 இன்று பிறந்து விட்டது. புதிய ஆண்டில் நல்ல விடயங்களைச் செய்வதற்கு நாம் திட்டமிடுவோம். எமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாம் இயன்ற முயற்சியை மேற்கொள்வோம். காலம் பெறுமதியானது. காலத்தை வீணாக்காதீர்கள். சென்ற நாள் திரும்பி வராது. பழையவற்றை எண்ணி கலங்காது புதியவற்றை சாதிப்பதற்கு ஆயத்தமாவோம். எம் மண்ணில் நல்லவையே நடக்க வேண்டுமென்று பிரார்த்திப்போம். அறம் செய்யாத ஆட்சி நிலைப்பதில்லை. எவர் ஆட்சியில் இருந்தாலும் தர்மத்தின் அடிப்படையில் மக்களை நேசிக்கவேண்டும். உண்மையான சத்திய ஆட்சி உருவாக வேண்டும். எல்லா மக்களுக்கும் பூரண சுதந்திரம் கிட்ட வேண்டும் தேவையற்ற ஆடம்பரங்களை எம்மக்கள் தவிர்க்க வேண்டும். இளைய தலைமுறையை நல்வழிப்படுத்துவதற்கு அவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்வோர் முன் உதாரணமாக செயற்பட வேண்டும். எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கு இனிய வழியில் வாழ முற்படுவோம். புதிய ஆண்டு புது மனிதர்களாக எம் பணி தொடர்வோம்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்,**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**உப தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்.**

## எழிலுடன் பிறந்திடு புத்தாண்டே

பன்னிரு மாதங்கள் பகலிரவாய் மறைந்தன
பதியிருள் கலைந்திட புத்தாண்டும் மலர்ந்தது
துன்பமது நீங்கிடும் தங்கமான ஆண்டாக
திக்கெல்லாம் ஒளிபரப்பி மங்கலம் காண்புறவே
தென்றலும் உளம் வருடும் துயரமதை வெல்லும்
துயின்று விழிக்கையில் விடிவுதனை சொல்லும்
பன்முக போதனையும் பட்டறிவு சாதனையும்
பாரெழில் கொளவே பிறந்திடு புத்தாண்டே

**“கலாபூசணம்” கே.ஆர்.திருத்துவராஜா.**



## நம்பிக்கையோடு புதிய ஆண்டை தொடங்குங்கள்

2024ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளை உலகம் முழுவதிலும் இப்புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இப்புதிய ஆண்டு உங்கள் உள்ளத்து எண்ணங்கள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர் மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகிறோம்.

2023ஆவது ஆண்டு பல இன்பமான அனுபவங்களையும் பல துன்பமான அனுபவங்களையும் தந்து எம்மை விட்டுக் கடந்து சென்று விட்டது. கடந்த ஆண்டின் அந்த இன்ப அனுபவங்களுக்கு மட்டுமல்ல துன்ப அனுபவங்களுக்கும் இறைவனுக்கு நன்றி சொல்லுவோம்.

மலரும் புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும் இனியதாய் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனதுகளிலும் நிறையவே உண்டு.

மலரும் புதிய 2024ஆம் ஆண்டை இறைவேண்டுதல் ஆண்டாக உலகம் முழுவதிலும் கடைப்பிடித்து இறைவேண்டுதலில் முழுமையாக ஈடுபடும்படி திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

செபம் என்பது ஒரு பலமான ஆயுதமாகும். செபம் என்ற ஆயுதத்தால் அனைத்தையும் அடைய முடியும். அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியும். உலகில் முடியாதது எனக்கருதப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் முடிவு காண முடியும்.

கடந்த ஆண்டின் பல கடின அனுபவங்களின் தாக்கம் இன்னும் எம்மை விட்டு முழுமையாக அகலவில்லை. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கப்போகிறது என்ற பயம் முடிவில்லாத பயமாகவே உள்ளது. இறை வேண்டுதல் வழியேதான் இதுபோன்ற எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்.

இறை வேண்டுதல் ஆண்டான 2024ஆம் ஆண்டு முழுவதும் செபத்தில் நம்பிக்கை வைத்து இறைவேண்டுதலில் ஈடுபடும்படி அனைவருக்கும் அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

இறைவனின் அன்னையும் இறைமக்களின் அன்னையுமான தேவ அன்னை தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் பாதுகாத்து வழி நடத்த வேண்டி இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

**கலாநிதி. ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்**
**ஆண்டகை, யாழ்.ஆயர்.**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3006

Search for people, places and things

**கௌசிகன்**




**ஆரணி**




**அபிசன்**




**பிரகாஷ்**




**இந்துயா**




**ராதிகா**




**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாநகரசபைய



## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகர ஆட்சி மன்றம் இன்று தனது பவளவிழாவினை அடைந்திருப்பதையிட்டு மகிழ்வடை கின்றோம். மக்களின் தேவைகளை உணர்ந்து பல வழிகளில் மாநகர ஆட்சி மன்றம் 75 வருடங்கள் யாழ்ப்பாண மக்களிற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் செயற்படுத்தி ஏனைய மாநகராட்சி மன்றங்களிற்கு முன்னுதாரணமான பணிகளைச் செய்கின்ற செயல் வடிவங்களைக் கொண்டது. குறிப்பாக சைவ சமய விவகாரக்குழு அமைத்து சமய, மத வேறுபாடுயின்றி அனைத்து மத சேவைகளையும் செய்து கொண்டிருக்கின்ற சமய சபையாகும். இப்பணிகளில் ஈடுபடுகின்ற, பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் அனைவரையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம். நகரத்தினை அழகுபடுத்தி சிறப்பு செய்ய இறையருளை சிந்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு...

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,**
**இரண்டாவது குரு மஹாசந்நிதானம்.**



## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் மாநகரசபையின் பவளவிழா நடைபெறுகின்ற நிலையில், அதற்கென வாழ்த்துச் செய்தியொன்றினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

1861ஆம் ஆண்டில் வீதிக்குழு என அழைக்கப்பட்ட ஓர் அமைப்பு உள்ளூராட்சி சபையைப் போன்றதொரு தோற்றத்தில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டிருந்தது. பின்னர் இது 1921ஆம் ஆண்டில் நகரப் பகுதிச் சபை எனவும் அதன் பின்னர் 1940ஆம் ஆண்டில் இது நகரசபையாகவும் 1949ஆம் ஆண்டில் மாநகரசபையாகவும் மாற்றம் கண்டுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் மண்ணைப் பிரதிபலிக்கின்ற மரத்தினால் செய்யப்பட்ட யாழ் சின்னத்தைக் கொண்ட யாழ்ப்பாண மாநகரசபையின் கட்டடம் ஏற்கனவே யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டில் ஏற்பட்டிருந்த ஆயுத யுத்தம் காரணமாக இக்கட்டடம் முற்றாகஅழிக்கப்பட்டுவிட்டது. அதுமட்டுமல்லாமல் மூன்று மேயர்களையும் இந்த பயங்கரவாதம் பலி கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் முதலாவதாக 2009ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 08ஆம் திகதி மேற்படி மாநகரசபைக்கான தேர்தல் நடத்தப்பட்டது. அப்போது நாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் மொத்தமாக 23 இடங்களில் போட்டியிட்டு 13 இடங்களில் அமோக வெற்றி பெற்று ஆட்சி நிர்வாகத்தைப் பொறுப்பேற்றிருந்தோம். அப்போது திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா அவர்கள் மேயராக நியமிக்கப்பட்டார்.

எமது ஆட்சி நிர்வாக காலத்தில் தற்போது தற்காலிகமாக இயங்கி வருகின்ற யாழ்ப்பாண மாநகரசபையின் கட்டடத்தை ஏற்கனவே அக்கட்டடம் அமைந்திருந்த யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியிலேயே மீள நிர்மாணிப்பதற்கான முயற்சிகளை எடுத்திருந்தோம். அது இன்று சாத்தியமாக்கப்பட்டு வருகின்றது. நல்லூர்ப் பகுதியிலே அமையப் பெற்றுள்ள சங்கிலிய மன்னரின் சேதமடைந்திருந்த சிலையினை புனரமைத்து திறந்து வைத்தோம். அத்துடன் எமது பண்டைய மன்னர்களான எல்லாளன், பரராஜசேகரன், பண்டாரவன்னியன் ஆகியோரது சிலைகளை யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரத்தை சுற்றியுள்ள அமைத்தோம். யாழ் நங்கையின் சிலையினை பண்ணைச் சந்தியில் அமைத்தோம். எமது சமூகத் தலைவர்களது வேண்டுகோளுக்கிணங்க நாவலர் மண்டபத்திலே வைக்கப்பட்டிருந்த ஆறுமுகநாவலரின் திருவுருவச்சிலையினை நல்லூர் ஆலயச்சூழலில் பிரதிஷ்டை செய்து வைத்தோம்.

யாழ்ப்பாணம் நகரத்திற்கு போதிய வசதிகள் கொண்ட கலாசார நிலையமொன்றின் தேவையைக்கருதி இந்திய அரசாங்கத்தின் ஊடாக அதற்கான பணிகளை ஆரம்பித்திருந்தோம். அது இன்று கம்பீரமாக எழுந்து நிற்கின்றது.

கோம்பயன்மணல் மயானத்தில் மின்சக்தி எரியூட்டி அமைக்கப்பட்டது. பண்ணைப் பகுதியில் கடற்கரையோர பூங்காவினை நடைபயிற்சிப் பாதை அமைக்கப்பட்டது. பழைய பூங்கா சிறுவர் பூங்காவாகவும் பொழுதுபோக்கு இடமாகவும் மாற்றியமைக்கப்பட்டது. இப்படி பல...


இது போன்ற மக்கள், சமூக நலன்கள் சார்ந்த நாம் பல பணிகளை ஆற்றியிருந்தோம். தொடர்ந்து எம்மால் 05 வருடங்கள் இந்த மாநகரசபையின் ஆட்சி நிர்வாகத்தினை முன்னெடுக்க முடிந்திருந்தது.

அதன் பின்னர் நடத்தப்பட்ட தேர்தலில் எந்தக்கட்சியும் பெரும்பான்மை பெறாத நிலையில் கூட்டுச்சேர்ந்து ஆட்சி அமைத்தவர்களால் தொடர்ந்து அதன் நிர்வாகத்தை முன்னெடுக்க முடியாமல் அவர்கள் மாறி மாறி எமது உதவியையே நாட வேண்டிய நிலை ஏற்பட்டிருந்ததையும் எமது மக்கள் அறிவார்கள்.

இன்று இந்த மாநகரசபையின் பவளவிழா கொண்டாடப்படுகின்றது. யாழ்ப்பாணம் மாநகர சபை கடந்து வந்துள்ள பாதை மிகவும் கடினமானது. தற்போது ஆணையாளரின் கீழ் இது செயற்படுத்தப்பட்டு வருகிறது. அவரும் தன்னால் இயன்ற அளவில் அதன் நிர்வாகத்தை முன்னெடுத்து வருகின்றார். அந்தவகையில் யாழ்ப்பாண மாநகரசபையின் வளர்ச்சியில் பங்கெடுத்த, பங்கெடுத்து வருகின்ற அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேநேரம், யாழ்ப்பாணம் மாநகரசபைக்கென உயிர்த்தியாகம் உட்பட பல்வேறு தியாகங்களைச் செய்தவர்களையும் இன்றையநாளில் நினைவுகூருகின்றேன்.

**திரு.டக்ளஸ் தேவானந்தா (பா.உ)**
**கடற்றொழில் அமைச்சர், செயலாளர் நாயகம்-ஈ.பி.டி.பி.**



## வாழ்த்துச் செய்தி
### இன்று யாழ்.மாநகரத்தின் பவளவிழா

யூலை 1906 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபையாக ஆரம்பிக்கப்பட்டு பல கட்டங்களையும் கடந்து 1943 ஆம் ஆண்டு யாழ். மாநகரசபையாக உயர்த்தப்பட்டு இன்று அதன் 75 ஆவது பவள விழாவினைக் கொண்டாடும் யாழ். மாநகர சபையை முன்னாள் முதல்வர் என்ற வகையில் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

அத்துடன் இதனை ஆரம்பிப்பதற்கு வித்திட்டவர்களை நன்றியுடன் நினைவுகூருகின்றேன். அவர்களின் பணி தொடர்ந்து எம் மக்களுக்கு கிடைக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.செல்லன் கந்தையன், முன்னாள் முதல்வர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்**



## வாழ்த்துச் செய்தி

யாழ். மாநகர மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் யாழ். நகரைச் சுத்தமாகப் பேணவும் 01.01.1949இல் ஸ்தாபிக்கப்பட்ட யாழ். மாநகர சபையானது 01.01.2024 இல் பவள விழாவைக் கொண்டாடுகின்றது. பவள விழாக் காணும் யாழ். மாநகரசபையானது பல இன்னல் காலங்களிலும் தன்னாலான மக்கள் சேவையை ஆற்றியது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. தென்னிலங்கையிலிருந்து யாழ். நகர் வருகின்ற மக்களின் தேவைகளையும் ஸ்ரீ நாக விகாரையுடன் இணைந்து மிகச்சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. இனிவரும் காலங்களிலும் சகல வளங்களையும் பெற்று சிறப்பாகச் சேவையாற்ற வேண்டும் என புத்த தர்மத்தில் ஆசீர்வாதம் செய்கின்றேன்.

**விகாராதிபதி, வண.கலைமாணி மீஹாஹயன்துரே சிறிவிமல தேரர்,**
**தலைவர், ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த நிலையம், யாழ்ப்பாணம்.**



## வடமாகாண கௌரவ ஆளுநரின் வாழ்த்துச் செய்தி

1861 ஆம் ஆண்டு வீதிக்குழு என உருவாக்கப்பட்ட அமைப்பானது 1898இல் உள்ளூராட்சி சபையாகவும் 1940ஆம் ஆண்டு நகர சபையாகவும் மாற்றப்பட்டு 1949ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகர சபையாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியையும் நல்லூர்த் தொகுதியின் ஒரு பகுதியையும் உள்ளடக்கி 27 தனி வட்டாரங்களை நிர்வாகம் செய்து வரும் அலுவலகமாக திகழ்கின்றது. பல சிறப்பான மாநகர முதல்வர்களாலும் ஆளுமை மிக்க ஆணையாளர்களாலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளாலும் ஆளுமை மிக்க அரச அலுவலர்களையும் உள்ளடக்கி சமூகநலன்கள் மற்றும் மக்களின் மேம்பாட்டிற்காக ஆற்றல் மிக்க பணிகளைத் தொடர்ந்து சிறப்பாக ஆற்றுவதுடன் பல சவால்களையும் இடர்களையும் களைந்து யாழ். நகரின் மத்தியில் தளராத சேவையினை வழங்கி வருகின்ற வடக்கு மாகாணத்தின் ஒரேயொரு மாநகர சபையானது 75 ஆண்டுகளை நிறைவுசெய்து பவளவிழா காண்பதில் பெருமிதம் கொள்கின்றேன். இலங்கை திருநாட்டின் சிறப்பு மிக்க மாநகர சபையாக செயற்பட்டு யாழ். நகரினை அழகுமிக்க தூய நகரமாகப் பேணுவதுடன் மேலும் சமூக மேம்பாடு, நல்லிணக்கம், மற்றும் உலகமயமாக்கலுடன் எதிர்கால சந்ததியினரின் சுபீட்சமான வாழ்விற்கும் தளமிடும் வகையில் பணிகளை விரிவாக்கி வளமான சேவையினைத் தொடர்ந்தும் எம்மக்களுக்கு வழங்க வாழ்த்துகின்றேன். இவ்விழாவிற்கான ஆக்கப் பணிகளில் சேவையாற்றியோருக்கும் நிகழ்வுகளை ஒழுங்கமைத்தவர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதுடன் இவ்விழா சிறப்புற நிகழ்வதற்கும் இறையாசிகளுடன் கூடிய நல்வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.பீ.எஸ்.எம்.சார்ள்ஸ், ஆளுநர், வடமாகாணம்.**



## பவளவிழா வாழ்த்துச்செய்தி

யாழ். மாநகரசபையானது 01.01.1949ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு 01.01.2024 இன்று பவளவிழாவினைக் கொண்டாடும் நாளில் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க உவகையடைகின்றேன். புதிய யாழ்ப்பாணத்தைக் காண வேண்டும் என்ற மக்களின் ஒன்றுபட்ட பார்வை நிறைவேறுவதற்கு யாழ். மாநகர சபையின் தொடர்பணிகள், உதவிகள், பங்களிப்புக்கள், முயற்சிகள் அளப்பரியன.

மாநகர வடிகால் அமைப்பினைப் பராமரித்தல், கழிவகற்றல், முகாமைத்துவம், ஆரம்ப சுகாதார நலநோன்பு பணிகள், தீயணைப்பு மற்றும் நோய்க் கட்டுப்பாடுகள், நல்லூர் ஆலய மகோற்சவ காலங்களில் மேற்கொள்ளப்படும் அதிசிறப்புப் பணிகள் மற்றும் எமது மண்ணின் வாசனையை எடுத்தியம்பும் பண்பாட்டுக் கலாசார நிகழ்வுகள் எனப் பலவற்றை வரிசைப்படுத்த முடியும்.

உலகத் தமிழ் மக்களின் புலமைச் சொத்தாகக் கருதப்படும் யாழ். நூலகத்தினை சிறப்பாக பேணுதலும் யாழின் மிக உயர்ந்த கட்டடமாகத் திகழும் யாழ்ப்பாண கலாசார நிலையத்தினை கையேற்று சிறப்புற நிர்வகிக்கும் ஆரம்ப நடவடிக்கைகளையும் எடுக்கும் முயற்சிகளும் பாராட்டுக்குரியன. மேலும் மிக உன்னத கட்டடக் கலைநுட்பங்களுடன் அழகுற வடிவமைக்கப்பட்டு அமைக்கப்பட்டு வரும். யாழ் மாநகரசபைக்கான நிரந்தர கட்டடத்தில் இப்பவள விழா ஆண்டில் உங்கள் பணிகளைத் தொடங்கவும் இன்னும் யாழ். மாநகர மக்களுக்காக சீரிய பணிகளாற்றி சாதனைகள் பல படைத்திடவும் மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளும் வெற்றி பெறவும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

**திரு.வரதீஸ்வரன், செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு,**
**வடமாகாணம்**



## பவளவிழா வாழ்த்து

யாழ்ப்பாண மாநகர சபையின் பவளவிழா நடைபெறும் வேளையிலே இதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். நமது பாரம்பரியத்திலே பவளவிழா ஏன் கொண்டாடப்படுகின்றது? ஏன் கொண்டாடப்பட வேண்டும்? என்ற சிந்தனை என் மனத்திலே நிழற்படமாக நகர்கின்றது. ஒரு தனிமனிதனின் வாழ்க்கை அல்லது ஒரு நிறுவனத்தின் பயணத்தில் ஒவ்வொரு வருடமும் முக்கியமானவை. பிறந்தது முதல் இன்று வரை எமது வாழ்க்கைப் பயணம் எப்படி அமைந்தது என்று எண்ணிப் பார்ப்பதிலே ஒரு சுகம் உண்டு. கண்ணீரும் புன்னகையும் கலந்த காலங்கள், தென்றலும் புயலும் வீசிய காலங்கள், கடும் மழையும் கொடும் பனியும் கழிந்த காலங்கள் என்பது மனித வாழ்வியலுக்கும் நிறுவனப் பயணத்திற்கும் பொருந்தும். நான் நிறுவனத்தையே நினைத்துப் பார்க்கின்றேன். தனிமனித வாழ்வைச் சரிதம் என்பர். நிறுவனத்தின் பயணத்தைச் சரித்திரம் என்பர். சரிதம் வேறு, சரித்திரம் வேறு. இன்று எமது மாநகர சபை எழுபத்தைந்தாவது அகவையிலே கால்பதித்து நடைபயில்கின்றது. எமது பண்பாட்டிலே இருபத்தைந்து (வெள்ளிவிழா), ஐம்பது (பொன்விழா), அறுபது (மணிவிழா), எழுபத்தைந்து (பவளவிழா), எண்பது (அமுதவிழா), நூற்றாண்டு விழா என்பவை சிறப்புறக் கொண்டாடப்படுவது வழக்கம். நிறுவனங்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் நூற்றாண்டு விழாவையே சிறப்பாகக் கொண்டாடுவர். இப்பொழுது இருபத்தைந்து தொடக்கம் எழுபத்தைந்து வரை நிறுவனங்களும் தனிமனிதர்களும் சிறப்பாக விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

நிறுவனங்களைப் பொறுத்தவரை இவ்விழாக்கள் மிகவும் முக்கியமானவை என்பது எனது அபிப்பிராயம். இந்த விழாக்களினாலே பல நன்மைகள் இருந்தபோதிலும் இரண்டு நன்மைகள் மிகவும் பிரதானமானவை. ஒன்று: நிறுவனம் இவ்வளவு காலமும் பயணித்த பாதையை அளந்து பார்க்கும் (மதிப்பீடு செய்யும்) வாய்ப்பு இவ்விழாக்களினூடே கிடைக்கும். விமர்சன ரீதியிலே கடந்த காலச் செயற்பாடுகளை அணுக முடியும். இரண்டு: இனிவருங் காலங்களிலே நாம் எப்படிப் பணியாற்ற வேண்டும்? எப்படிப் பயணிக்க வேண்டும்? எனத் தீர்மானித்துச் செயற்பட உதவும். யாழ்ப்பாணம் தொன்மை வாய்ந்த நகரம். 12 ஆம் நூற்றாண்டில் இருந்து 16 ஆம் நூற்றாண்டு வரை தனிமையான ஆட்சிக்கு உட்பட்டிருந்த பிரதேசம். எனவே, இதன் தொன்மையைப் பேணும் வகையிலும் புதியவற்றைப் பொருத்தம் நோக்கி ஏற்கும் வகையிலும் செயலாற்ற வேண்டியது காலம் எமக்குக் கற்பித்த பாடமாகும். யாழ் மாநகர சபையின் உரிமையை நிலைநாட்ட அரசியல் தலைவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் உயிர்த்தியாகங்களை இம்மண்ணுக்காக அர்ப்பணித்துள்ளார்கள். அவர்களையும் இவ்வேளையில் நினைவுகூருகின்றேன்.

**திருமதி.ப.யோகேஸ்வரி, முன்னாள் முதல்வர் மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**



## பவள விழா இதழுக்கான வாழ்த்துரை

யாழ்.மாநகர சபையானது மாநகர சபை கட்டளைச் சட்டம் 17 இற்கு அமைவாக 1949ஆம் ஆண்டு மாநகர சபையாக நிறுவப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை பல துன்பங்களையும் துயரங்களையும் எதிர்கொண்டு கம்பீரமாக யாழ். மக்களுக்கு சீராகவும் சிறப்பாகவும் செயற்பட்டு இன்று 75 வருடங்களைப் பூர்த்தி செய்து தனது இடையறாத சேவையினைத் தொடர்ந்தும் நல்கி வருவதையிட்டு நாம் பெருமை கொள்ள வேண்டியதாயுள்ளோம். இலங்கை வரலாற்றில் 1865- 1872 வரையான காலப்பகுதியில் சேர் கேக்கியூலஸ் (Sir Hercules) மற்றும் தொடர்ந்து லோட் றொஸ்மீட் (Lodr Rosemead) அவர்களால் கண்டிக்கான தொடருந்து பாதை திறக்கப்பட்டதன், பின் அவர்களால் முதன்முறையாக உருவாக்கப்பட்ட மாநகரங்களாக கொழும்பு, கண்டி, மற்றும் காலி மாநகரங்கள் மக்கள் பொதுப்பணிக்காகவும் நாளாந்த இதர சேவைகளுக்காகவும் அமையப் பெற்றது. பின்னர் இலங்கையின் நான்காவது மாநகரமாக "யாழ்.மாநகரம்" 1949 ஜனவரி 01 இல் உருவாக்கப் பெற்றது. இது ஒரு மகிழ்ச்சியான காரியமாகும். இச்சபையானது எதிர்காலத்தில் மக்கள் பிரதிநிதிகளால் சீராகவும் சிறப்பாகவும் செயற்பட வேண்டும் என்பதே எமது விருப்பாகும். இவ்விடயம் கூடிய விரைவில் நிறைவேறும் என்பதை இப்பவள விழாவில் வலியுறுத்தி நிற்கின்றேன். இவ்வேளையில் மாநகர சபை ஆணையாளர் திரு.த.ஜெயசீலன் அவர்களால் இப்பவள விழா சிறப்பாக முன்னெடுக்க பூரண ஆதரவு வழங்குவது வரவேற்கத்தக்க செயலாகும். சீரிய பண்பும் கடமையுணர்வும் பக்தி நெறியும் ஒன்றுபடும் போது அனைத்தும் சீராக அமைகிறது. எனவே ஆணையாளரின் முயற்சியும் அவரின் உத்தியோகத்தர்களின் பூரண பங்களிப்பும் இப்பவள விழாவினைச் சிறப்பிக்க வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு.இம்மானுவல் ஆனல்ட், முன்னாள் முதல்வர், மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-8056)

01.01.1949



யாழ். மாநகர சுருக்க

15 ஆம் நூற்றாண்டு காலத்தில் நல்லூரைத் த
சங்கிலி மன்னன் காலத்திலிருந்தே இலங்கையின்
விளங்கியுள்ளது. ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில்
Committee) என அழைக்கப்பட்ட உள்ளூராட்சிச்
யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டது.

பின்னர், 1898 ஆம் மற்றும் 1906 ஆம் ஆண்டில்
விதிகளுக்கு அமைய முதலாவது உள்ளூராட்சிச் ச
ஆம் ஆண்டில் இது நகரப்பகுதிச் சபை ( Urban Dis
இல் நகரசபையாகவும் தரம் உயர்த்தப்பட்டது. 194
கொண்ட மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் ஏ
ஸ்தாபிக்கப்பட்டது.

மேற்கு ஐரோப்பிய ஆட்சிக்காலத்தில் யாழ். ந
மண்டபக் கட்டடம் 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இ
காரணமாக முற்றுமுழுதாக அழிந்துவிட்டது. அதன்
நல்லூர்ப் பகுதியில் தற்காலிகமாக அமைந்துள்ள
நகரமண்டபம் அமைப்பதற்காக 07.09.2019
நடைபெற்றுக்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதா



## வடக்கு மாகாண உள்ளூரா

வடக்கு மாகாணத்தில் ஒரேஒ
மாநகரசபையானது 01.01.1949 ஆ
ஆண்டில் பவளவிழா காண்கின்
வழங்குவதில் நான் பேருவகை அ
யாழ். மாநகர சபையின் 75 ஆ
இவ்வேளையில் இதன் வெற்றிக்கு உ
பொதுமக்கள், அலுவலர்கள் மற்றும் நலன்விரும்பிகளுக்கு என
கொள்கின்றேன்.

கடந்த ஏழரை தசாப்தங்களாக பொதுமக்களின் நலனுக்
அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடையா
இதயங்களில் தனிஇடத்தைப் பெற்றுள்ளது.

பவளவிழாவைக் கொண்டாடுவதற்கிடையில் பல சாதனை
மாநகரசபையின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு
பங்களிப்பாளர்களின் அயராத உழைப்பு, யாழ்ப்பாணமாநகரச
முக்கிய பங்கு வகிக்கிறது.

யாழ். மாநகரசபையானது புதிதாக நவீனமயப்படுத்தப்பட்ட
தனது சேவையினை மேலும் மெருகூட்டுவதற்கு புதிய இடம்
யாழ். மாநகரசபை மென்மேலும் சாதனைகள் பல
மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கி

**திரு.செ.பிரணவநாதன், உள்ளூரா**
**வடமாகாணம்**



## பவளவிழா

1949 ஜனவரியில் ஸ்தாபிக்கப்ப
2024 ஆம் ஆண்டில் தனது 75
பவளவிழாவைக் கொண்டாடிக் கொ
என்ற வகையில் எனது வாழ்த்துக்க
அடைகின்றேன். வடமாகாண
இலங்கையில் முதன்முதலில் அ
விளங்கும் யாழ்ப்பாணம் மாநகர ச
சந்தித்தபோதும் இன்றும் தனக்குரிய மிடுக்குடன் செயற்பட்டு
இம் மாநகரசபைக்கு 30.12.2020 தொடக்கம் 30.12.
முதல்வராகச் செயற்பட்டு யாழ். மாநகர மக்களுக்கு சேவை
பாக்கியமாகும். இவ்வாய்ப்பை எனக்களித்த இறைவனுக்கு
மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை இருந்த காலத்தி
காலத்திலும் சரி மக்களுக்கு வீதிகள், சுகாதாரம், வடிகால், வீதி
மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்ற பல பொதுச்சே
சேவைகளைத் தொடர்ந்தும் நவீனமயப்படுத்தப்பட்ட நிலை
மேம்பாட்டிற்கு ஏற்ற வகையில் செயற்படவேண்டும் எனவும் ய
மிகுந்த மிடுக்குடன் புதிதாக அமைக்கப் பட்டுவரும் நிலையில்
நிறைவு பெற்று மாநகரசபையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்ப
தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.வி.மணிவண்ணன், மு**
**மாநகரசபை, யாழ்**

**மாநகரசபை, யாழ்ப்பாண**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயின் பவளவிழாச் சிறப்பிதழ்

01.01.2024



மாநகர சுருக்க வரலாறு
நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த
இலங்கையின் முக்கிய நகரமாக யாழ். நகரப்பகுதி
சிக்காலத்தில் 1861 ஆம் ஆண்டில் வீதிக் குழு (Road
ள்ளூராட்சிச் சபையைப் போன்றதொரு அமைப்பு

ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 13 ஆம் இலக்கச் சட்ட
ளூராட்சிச் சபை (Local Board) உருவானது. 1921
( Urban District Council) ஆகவும் பின்னர் 1940
ப்பட்டது. 1947 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கம்
சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1949.01.01 அன்று

தில் யாழ். நகரத்தினை நிர்வகிப்பதற்கான நகர
தப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர்
ிட்டது. அதன் பின்னர் குறித்த மாநகரசபைகட்டடம்
மைந்துள்ளது. தற்போது அதே இடத்தில் புதிதாக
7.09.2019 அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகள்
பிடத்தக்கதாகும்.

### ண உள்ளூராட்சி ஆணையாளரின் வாழ்த்து

த்தில் ஒரேஒரு மாநகரசபையாக விளங்குகின்ற யாழ்.
01.01.1949 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு 2024 ஆம்
ா காண்கின்றது. பவளவிழா இதழுக்கு வாழ்த்துரை
பெருவகை அடைகிறேன்.
பையின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
ன் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பெருமதிப்பிற்குரிய
ம்பிகளுக்கு எனது அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக்

களின் நலனுக்கான உறுதிப்பாடு, சமூக உணர்வு மற்றும்
றின் அடையாளமாகத் திகழ்ந்து யாழ்ப்பாண மக்களின்

பில் பல சாதனைகளை நிறைவேற்றியுள்ளது. மேலும், யாழ்.
னேற்றத்திற்கு நாமும் பங்காற்றுவோம். யாழ். நகர
ாணமாநகரசபையின் வளர்ச்சிக்கு சந்தேகத்திற்கு இடமின்றி

யப்படுத்தப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய நிரந்தர கட்டடத்தில்
ற்கு புதிய இடம் நோக்கி நகரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
தனைகள் பல படைத்து முன்னேற்றம் அடைய எனது
ித்துக் கொள்கின்றேன்.

ன், உள்ளூராட்சி ஆணையாளர்,
டமாகாணம்.

### பவளவிழா வாழ்த்துச் செய்தி

ல் ஸ்தாபிக்கப்பட்ட இவ் யாழ்ப்பாணம் மாநகர சபையானது
டில் தனது 75 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து தனது
ண்டாடிக் கொண்டிருக் கின்றது. இதற்குமுன்னாள் முதல்வர்
து வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வு
வடமாகாணத்தின் ஒரேஒரு மாநகரசபையாகவும்
ன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட சபைகளுள் ஒன்றாகவும்
ணம் மாநகர சபை தனதுகாலத்தில் யுத்தத்தால் பேரழி வைச்
ன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
டக்கம் 30.12.2022 வரையான காலப்பகுதியில் மாநகர
களுக்கு சேவையாற்றக் கிடைத்தமை எனது வரலாற்றுப்
இறைவனுக்கு நன்றிகள்.
நந்த காலத்திலும் சரி,தற்போதைய மக்கள் சபை இல்லாத
,வடிகால்,வீதிவிளக்குகள், நூலகங்கள், பொதுப்பூங்காக்கள்
ல பொதுச்சேவைகளை சிறப்புற வழங்கிவருவதுடன், இச்
தப்பட்ட நிலையில் மக்களுக்கு ஆற்றி மக்களின் வாழ்வின்
டும் எனவும் யுத்தத்தி னால்அழிக்கப்பட்ட நகரமண்டபமானது
நம் நிலையில் வெகுவிரைவில் அதன் கட்டுமானப் பணிகள்
ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் எனது வாழ்த்துக்களைத்

ன்னன், முன்னாள் முதல்வர்,
சபை, யாழ்ப்பாணம்.

### யாழ். மறைமாவட்ட ஆயரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாண மாநகரசபை 01.01.1949ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு 75 ஆண்டுகள் கடந்து தனது மகத்தான பணியை மக்களுக்கு செய்து வருகின்றது. இந்த பவளவிழா நினைவாக வெளியிடப்படுகின்ற சிறப்பிதழிற்கு வாழ்த்துச் செய்தி தருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இவர்கள் எம்மக்களுக்கு செய்து வருகின்ற மிகச்சிறப்பான பணிகள் பாராட்டத்தக்கது. வீதி அபிவிருத்தி, சுகாதாரம், வடிகால் அமைப்பு முறை, மக்களிற்கான வீட்டுத்திட்டங்கள், நூலகங்கள், பொது வெளிபூங்காக்கள், இன்னும் மக்களிற்கான பொழுதுபோக்குகள் போன்ற பணிகளை மக்களுக்கு சிறப்பாக செய்து வருகின்றார்கள். தொடர்கின்ற காலங்களிலும் எமது யாழ். மண்ணின் மக்களுக்காக, மக்களின் வாழ்வை வளம்படுத்துவதற்காக மென்மேலும் சிறப்பான பணிகளை செய்யவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இந்த மாநகரசபையிலே பணிபுரிகின்ற யாழ். மாநகரசபை முதல்வர், ஆணையாளர், ஏனைய உத்தியோகத்தர்கள் எல்லோருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறிநிற்கின்றேன். தொடர்ந்தும் உங்களது பணிகள் மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள் கூறி ஆசித்து நிற்கின்றேன். புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

இறைவனின் ஆசி என்றும் உங்களோடு இருப்பதாக.

**கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள**
**பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம், யாழ். ஆயர்.**

### Gréeting Message on Pavala Vizha of the Municipal Council , Jaffna



The Northern Province consists with 34 Local Authorities - one Municipal Council, five Urban Councils and twenty eight Pradeshiya Sabhas are responsible for providing a variety of local public services and are functioning with the view to build the well-being of communities. All the Local Authorities of the country are subordinate to the Central Government.

The Municipal Council, Jaffna, which was the first organized Local Government for Jaffna, was established under the provision of Municipal Council Ordinance No 29 of 1947 on 01.01.1949 . Observing the records, it is able to aware the historic and powerful dominant backgrounds and had overcome several governing challenges it's public service pathway. With the devoted and loyal respectable elected authorities and entrusted administrative body had led the JMC as an exemplary LG during prior periods. .

The Jaffna Municipal Council, the well demarcated administrative structure with numerous public services under essential sectors in the Jaffna city, is always admired among the provinces as the best pubic partner and service provider . Reviewing the dynamic public service tracks with guidance of noble pioneers within the administrative limits of the Municipality charged with the regulation, control and administration of all matters for 75 years, everyone is able to know the spectacular deputation and renowned reputation of Jaffna MC.

On celebrating the historic event of the JMC , my heartiest appreciations and kind regards are hereby expressed for all the pioneers, those had administered and served reliably for the operative function of JMC from its' foundation and wishes for the Commissioner and all officers, presently serving dutifully at the Jaffna Municipal Council with effective and well-intentioned public services.

**Mr.S.M.Saman Bandulasena,**
**Chief Secretary, Northern Province.**

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண மாநகர சபையின் பவள விழா கொண்டாட்டத்தில் மலரும் பவள விழா சிறப்பு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். 15 ஆம் நூற்றாண்டு காலத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சங்கிலி மன்னன் காலத்திலிருந்தே இலங்கையின் முக்கிய நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் விளங்கியமையும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1861 இல் உள்ளூராட்சி சபையை ஒத்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது. 1940 ஆம் ஆண்டில் நகரசபையாகவும் அதன் பின்னர் 1949 ஆம் ஆண்டு மாநகரசபையாகவும் தரம் உயர்த்தப்பட்டு சிறப்பான சேவையை முன்னெடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. நகர மண்டப கட்டடத் தில் இயங்கிய மாநகர சபை 1983 ஆம் ஆண்டிலிருந்து நல்லூரில் இயங்கி வருவதும் தற்பொழுது மீண்டும் துரையப்பா விளையாட்டு மைதானத்திற்கு அருகில் தனது சொந்த நிலத்தில் புனர்நிர்மாணம் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண நகரத்தின் வரலாற்றுப்புகழ் மிக்க யாழ்ப்பாண நூலகத்தையும் துரையப்பா விளையாட்டரங்கு, சுப்பிரமணியம் பூங்கா, பழைய பூங்கா எனப் பெயர்பெறும் சிறுவர் பூங்கா, மற்றும் ஆரியகுளம் போன்றவற்றோடு இன்னும் பல பொழுதுபோக்கு மையங்களையும் முகாமைத்துவம் செய்வதோடு மட்டுமன்றி நல்லூர் உற்சவ காலத்தில் ஆலயத்தின் வெளிப்புறச் சூழலை அழகுபடுத்துவதிலும் நல்லைக்குமரன் மலரினை வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. பல்வேறு நகர அபிவிருத்தி நடவடிக்கைகளையும் காலத்திற்குக் காலம் பல முன்னேற்றகரமான பணிகளையும் மேற்கொண்டு வருவதில் முனைப்பு காட்டிவரும் யாழ். மாநகர சபை யாழ். மாநகரத்தை ஒரு சிறந்த பண்பாட்டு அம்சத் துடனும் சுகாதார விழுமியங்கள், நவீன அபிவிருத்தி போன்றவற்றை முதன்மைப்படுத்தி உலகின் முன்னணி நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணத்தை உருவாக்கும் பெரும் பொறுப்புக்குரிய நிறுவனமாகும் என்றால் மிகையாகாது. யாழ். மாநகர சபை எதிர்காலத்தில் செயற்படுத்த வேண்டிய பணிகள் மேலும் விரிந்து கிடக்கிறது என்பதனை நினைவுபடுத்தி பல்வேறு புத்தாக்கச் சிந்தனைகளுடன் மேலும் வளர்ச்சி பெற வேண்டுமென வேண்டுகின்றேன்.

"மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனத் தூய்மை தூவா வரும் "

என்னும் வள்ளுவனின் வாக்குக்கு அமைய மனத்தூய்மையாதலும் செய்யும் தொழில் தூய்மையாதலும் ஆகிய இரண்டும் தான் சேர்ந்த இனத்தின் தூய்மையையொட்டி வரும் என்பது போல புறத்தூய்மையாக யாழ். நகரை மாநகர சபை பேணி சிறந்த சேவையை ஆற்றிவரும் இவ்வேளையில் மலரும் பவளவிழா மலர் சிறப்புடன் இதழ் விரிக்கவும் இப்பணியை திறம்பட ஆற்றிவரும் ஆணையாளர் உட்பட அனைத்து ஊழியர்கள் மற்றும் மலர்க்குழுவினர் என அனைவரையும் பாராட்டி என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**திரு.அம்பலவாணர் சிவபாலசுந்தரன், அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

### பவள விழா காணும் யாழ் முத்தாக முகிழட்டும்



மனித வாழ்விற்கான தேவைகள் அனைத்தினதும் திக்குகள் திருப்பங்கள் கோணங்களின் சேவைகளை திறம்பட செயற்படுத்தி அன்றாடத் தேவைகளின் அவசியங்களையும் அத்தியாவசியங்களையும் அழகுற செம்மைப்படுத்தி செயலாற்றும் "யாழ் மக்களுக்கோர் அத்திவாரமே" "யாழ். மாநகர சபை" ஸ்தாபிப்பு என்றால் மிகையாகாது.

இந்தச் சபை 01.01.1949ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று பவள விழாவைத் தொட்டு நிற்கின்றது என்றால் அது எம்மக்களுக்கு கிடைத்த ஓர் வரப்பிரசாதம். எனவே இந்த வளர்ச்சியின் உயர்ச்சி எதிர்காலத்திலே பல்லாண்டுகளைத் தொட்டு யாழ். மக்களுக்கோர் நடமாடும் பல்கலைக் கழகமாக மிளிரும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

இவ்வேளையிலே சிறப்புற சேவையாற்றி அதன் தராதரத்தை தடங்கலின்றி நிறைவேற்றும் ஆணையாளரும் அவர்தம் ஏனைய செயற்படுத்துநர்கள் அனைவரும் போற்றப்பட வேண்டியவர்கள். இதேபோல் இதுகாலவரை செயற்பட்ட அனைவருக்கும் நன்றியறிதலை தெரிவித்து யாழ். மாநகர சபை கண்டுவிட்ட "பவளவிழா" நூற்றாண்டு விழாவைத்தொட்டு பல்லாண்டுகளாக வாழட்டும் என்று வாழ்த்துவதுடன் அதற்காக எல்லாம் வல்ல இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.

**அல்ஹாஜ் மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ்(காஸிமி)**
**யாழ்/கிளி மாவட்ட சர்வமதத் தலைவர்.**

### சிறப்புமிகு யாழ். நகரின் பெருமைமிகு மாநகர சபை



யாழ். நகரை நிர்வாகம் செய்துவரும் உள்ளூராட்சி அமைப்பான யாழ். மாநகரசபையானது தனது 75ஆவது ஆண்டை பூர்த்தி செய்வதனையிட்டு எனது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ். மாநகர சபையானது பொதுச்சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச்சேவைகள், பிரதேச மக்களின் பொதுநல வசதிகளை செவ்வனே ஆற்றிக் கொண்டிருப்பது கண்கூடு. மாநகர சபையின் மக்கள் மட்டுமன்றி யாழ். மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களிலுமுள்ள அநேகமான மக்களும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் மையமாக யாழ்ப்பாண நகர் விளங்குகின்றது என்பது மிகையாகாது. 1949 ஆம் ஆண்டிலிருந்து யாழ். மாநகர சபையாக ஸ்தாபிக்கப்பட்டு இன்றுவரை இம்மியளவும் குறையாத மக்கள் சேவையை ஆற்றிக் கொண்டிருக்கின்றது. சிறப்பாக, நல்லூர் கோவிலின் உற்சவ காலத்திலும் மற்றும் விசேடமான கந்தனுக்குரிய விரத தினங்களிலும் ஒன்றுகூடும் மக்களின் பெருந்திரளையும் ஒழுங்குபடுத்தி அடியார்களின் நலனுக்கு தீங்கு வராது கழிவகற்றல் முகாமைத்துவம் மற்றும் வெளிநிர்வாகப் பொதுப்பணிகளை மிகவும் உன்னதமாக ஆற்றுவது பாராட்டத்தக்கது. தனிமனிதனால் ஆற்றப்படுகின்ற தவறுகள் ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கும். ஒவ்வொரு விடயங்களிலும் மாற்றம் தனிமனிதனிலிருந்து உருவாக்கப்படும் போதே நிலையான அபிவிருத்தியை நோக்கி நகரமுடியும். மாநகர சபையும் அதன் நிர்வாகமும் தன்பணியைச் சிறப்புற ஆற்ற அதன் நிலைபேண் தன்மையை தக்கவைக்க ஒவ்வோர் தனிமனிதனும் உறுதிபூண வேண்டும்.

எனவே, மக்கள் சேவையே மகேசன் சேவையென மக்கள் பணியாற்றும் மாநகர சபைக்கும் அதன் நிர்வாகம் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இவ் 75ஆவது அகவை தின நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.இ.இளங்கோவன்,**
**ஜனாதிபதியின் மேலதிக செயலாளர், ஜனாதிபதி செயலகம்.**

### பவளவிழா வாழ்த்து



யாழ். மாநகர சபையின் பவளவிழா 01.01.2024 இன்று ஆகும். இதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கையில் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்ட நான்கு மாநகர சபைகளில் ஒன்று என்ற வரலாற்றுப் பெருமையும் வடமாகாணத்தில் உள்ள ஒரேயொரு மாநகர சபை என்ற சிறப்புடனும் எமது யாழ். மாநகர சபை திகழ்கின்றது.

கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாக யாழ். மாநகர சபைக்குள் வதியும் மக்களுக்கு மாத்திரமன்றி ஈழத்தமிழ் மக்களுக்கும் எமது யாழ். மாநகரசபை ஆற்றிய பணிகள், சேவைகள் அளப்பரியது. ஈழத்தமிழர்களுடைய வரலாற்றில் கடந்த 75 ஆண்டுகளை ஆய்வு செய்யும் எவரும் "அதில் யாழ். மாநகர சபையின் வகிபாகத்தை புறந்தள்ளி ஒதுக்கி அப்பால் சென்று விடமுடியாது.

சுமார் ஒருலட்சம் மக்களையும் சுமார் நாற்பதாயிரம் ஆதனங்களையும் கொண்டிருக்கும் யாழ். மாநகர சபை பிரதேசம் 27 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எமது யாழ். மாநகர சபை 27 கிளைகளையும் சுமார் ஆயிரம் உத்தியோகத்தர்கள் ஊழியர்களையும் கொண்ட மிகப் பெரிய அலுவலகமாக மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் பெரும் பங்காற்றி வருகிறது என்பதனை எவரும் மறுக்க முடியாது.

இதுவரை யாழ். மாநகர சபையின் பணிகளுக்குப் பெரும்பங்காற்றிய 28 கௌரவ முதல்வர்கள், 17 மாநகர ஆணையாளர்கள், வெவ்வேறு காலத்தில் மாநகர சபையில் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டு பணியாற்றிய கௌரவ உறுப்பினர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், சித்த வைத்திய அதிகாரிகள், பல்வேறு படிநிலை அரச உத்தியோகத்தர்கள், சபை நியமனத்தின் கீழ் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்கள், எமக்கு இன்று வரை ஒத்துழைப்பு வழங்கிய கௌரவ ஆளுநர்கள், மத்திய, மாகாண அரசு அதிகாரிகள், ஆலோசனைகளை வழங்கி வந்த அன்பர்கள், ஆகியோரை இச்சந்தர்ப்பத்தில் நெஞ்சார்ந்த நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

அத்துடன் யாழ். மாநகர சபையானது வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பொதுசன நூலகமும் அதன் ஐந்து கிளை நூலகங்கள், மணிக்கூட்டு கோபுரம், துரையப்பா விளையாட்டு மைதானம், பிரபல்யம் மிக்க மூன்று பூங்காக்கள், ஐந்து பெரிய சந்தைகள், ஆரியகுளம் உட்பட 44 குளங்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஒன்பது சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றது. யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்கி நிரந்தரமான சபையின் கட்டடம் அழிக்கப்பட்ட போதும் இன்றுவரை கடந்த 39 வருடங்களாக நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சொந்தமான காணியில் தற்காலிகமாக போதிய வசதிகளின்றி சபை இயங்கி வருகின்ற இவ்வேளையில் புதிய மாநகர சபை கட்டட நிர்மாணப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதும் யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் இந்திய அரசால் கட்டப்பட்ட யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம் நிமிர்ந்து நிற்பதும் மிக முக்கியமான விடயங்களாகும்.

இன்றைய நவீன சூழலில் பல்வேறு சமூக, பொருளாதார, கலை, கலாசார தேவைகளைப் பூர்த்தி செய்து யாழ். மாநகரத்தினுடைய வரலாற்றுப் பெருமைகளை மேலும் மெருகேற்றிப் பேணிக் காத்து, மாநகரில் வாழும் மக்களின் தேவைகள், வசதிகளை எமது இயலுமைக்குட்பட்ட அளவில் பூர்த்தி செய்து எமது பணிகளை மேலும் மேலும் முன்கொண்டு செல்ல அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டு யாழ். மாநகர சபையின் புகழ் வளர்ந்தோங்கி உயரவும் சபையின் பணிகள் எதிர்காலத்தில் தழைத்துச் செழித்துச் சிறந்தோங்கி ஒளிரவும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துப் பணிகின்றேன்.

**திரு.இ.த.ஜெயசீலன்,**
**ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

**உத்திராடம் 2,3,4பாதங்கள் நினைத்த செயலில் வெற்றி**

ஆத்மகாரகன் என்று கூறப்படும் சூரிய பகவான் நட்சத்திரத்தில் நீங்கள் பிறந்தாலும் 1ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு தனகாரகனான குருபகவான் இராசிநாதனாகவும் 2.3.4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஆயுள்காரகனான சனிபகவான் இராசிநாதனாகவும் உள்ளனர். கோச்சார ரீதியாக சனி சஞ்சரிக்கும் இடத்திற்கேற்ப பலன்களை அவரவர் கர்ம வினைக்கேற்ப வழங்கக் கூடியவராகிறார்.

உத்திராடம் 1 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு சனி 3ஆம் இடத்திலும் 2.3.4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு 2ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறார். இதனால் 2.3.4ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு வருமானத்தில் நெருக்கடி, குடும்பத்தில் சங்கடம், முயற்சிகளில் பின்னடைவு, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாத நிலை, உடல்பாதிப்பு, எதிர்பாராத விபத்து போன்றவற்றை உண்டாக்குவார். இவையெல்லாம் சனி பகவானின் சஞ்சாரத்தால் ஏற்படும் பொதுப் பலன்கள்.

**அதிர்ஷ்ட காலம்**

சனி பகவான் சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16. 2024 - ஜூன் 19. 2024 வரையிலும் நவ 4. 2024 - பெப் 27. 2025 வரையிலும் 4 பாதங்களில் பிறந்தவர்களுக்கும் அதிர்ஷ்ட பலன்கள் உண்டாகும். 2.3.4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு இக்காலங்களிலும் அஸ்தமனம், வக்கிர காலங்களிலும் சங்கடங்கள் விலகும். நினைத்தது நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். புதிய இடம், வாகனம் வாங்கும் முயற்சி, தொழில் தொடங்கும் முயற்சியாவும் வெற்றியாகும். 2ஆம் இட சனியால் உண்டாகும் பாதிப்புகளில் இருந்து விடுதலை உண்டாகும். நெருக்கடி விலகும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப்.26. 2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் 2.3.4ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகுவும் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவும் தொழிலில் முன்னேற்றம், உத்தியோகத்தில் உயர்வு, வருமானத்தில் நிறைவு, தொட்டதெல்லாம் வெற்றி என்ற நிலையை உண்டாக்குவர். ஏப்.26. 2025இற்கு பிறகு 2.3.4ஆம் பாதத்தினருக்கு 2ஆம் இட ராகுவும் 8ஆம் இட கேதுவும் குடும்பத்தில் குழப்பம், தொழிலில் மந்தம், வீண் அலைச்சல், சிலருக்கு தொழிலை மாற்றும் நிலை, உடல் பாதிப்பு, பண வரவில் தடை, வீண் சங்கடம், எதிர்பாராத விபத்துகளை உண்டாக்குவர்.

**குரு சஞ்சாரம்**

உத்திராடம் 2.3.4ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு மே 1.2024 - மே 13. 2025 வரையிலும் நன்மைகளை அதிகரிப்பார். எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வார். சமூகத்தில் அந்தஸ்து உயரும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவிகள் வந்து சேரும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும். சிலருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். நல்ல வேலை வாய்ப்பு உண்டாகும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும்.

**பொதுப்பலன்**

சனி பகவானின் சஞ்சார நிலை சாதகமாக இல்லையென்றாலும் இக்காலத்தில் மற்ற கிரகங்களின் சஞ்சார நிலை வாழ்க்கையை வளமாக்கும். எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும். வருமானத்தை அதிகரிக்கும். குடும்பத்தில் நிம்மதி, ஒற்றுமையை ஏற்படுத்தும். தொழிலில் ஏற்படும் தடைகளை விலக்கி வைக்கும். பணியில் இருந்த பிரச்சினைகளை நீக்கி வைக்கும். வேலை தேடியவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும். திருமண வயதினருக்கு திருமணம் நடக்கும். பொன், பொருள், பூமி, வாகனச் சேர்க்கையை உண்டாக்கும்.

**தொழில்**

தொழிலில் அக்கறை அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றியாகும். விவசாயம், இயந்திரத்தொழில், பத்திரிகை, பதிப்பகம், கம்யூட்டர் தொழில்கள், ஸ்டேஷனரி, ஆட்டோ மொபைல்ஸ், பேக்ரி, எலக்ட்ரானிக்ஸ், எக்ஸ்போர்ட், ரியல் எஸ்டேட் போன்றவை வளர்ச்சியடையும். உங்கள் முயற்சியின் காரணமாக லாபம் அதிகரிக்கும்.

**கல்வி**

படிப்பில் கவனம் அதிகரிக்கும். அதிக மதிப்பெண் பெற வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும். அதற்காக ஆசிரியர்களின் ஆலோசனைகளை ஏற்பீர்கள். மேற்கல்வியில் விரும்பிய பாடப்பிரிவில் இடம் கிடைக்கும்.

பரிகாரம்- நடராஜரை வழிபட்டு வர வாழ்க்கை வளமாகும். நிம்மதி கிடைக்கும்.

**திருவோணம் பேச்சில் கவனம்**

மனக்காரகன், மாதுர்காரகன் எனக் கூறப்படும் சந்திரபகவான். ஆயுள், கர்ம காரகனான சனி பகவான் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு டிசெ. 20. 2023 முதல் உங்கள் இராசிக்கு 2ஆம் இடமான தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தில் ஏழரைச் சனியின் பாத சனியாக சஞ்சரிக்கப் போகிறார் சனி பகவான்.

உங்கள் ஜென்ம ராசிக்கும் 2ஆம் இடமான தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்திற்கும் சனிபகவானே அதிபதியாகிறார் என்றாலும் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை அவரவரின் கர்ம வினைக்கேற்ப வழங்கிட வேண்டியுவராகிறார். இப்போது சஞ்சரிக்க உள்ள 2ஆம் இடமும் சனி பகவானின் சஞ்சாரத்திற்கு சாதகமான இடம் அல்ல என்றாலும் இதற்கு முன்பிருந்த சங்கடமான பலன் இனி உண்டாகாது. இக்காலம் ஏழரைச் சனியின் கடைசி காலகட்டம் என்பதால் முன்பு போல் நெருக்கடிகளை உங்களுக்கு சனிபகவான் வழங்க மாட்டார். இருந்தாலும் 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்ற போது குடும்பத்தில் பிரச்சினைகள் தலையெடுக்கும். பேச்சில் கவனம் தேவை. கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் போகும். பொருள் களவு போகும். பணஇழப்பு ஏற்படும் என்பதெல்லாம் பொதுவான விதி. இந்த நேரத்தில் மற்ற கிரகங்களின் சஞ்சார நிலைகளும் உங்கள் சுய ஜாதகத்தில் கிரகங்கள் அமர்ந்துள்ள நிலையும் நடைபெற்றுவரும் தசா புத்தியும் இந்த சங்கடங்களில் இருந்து உங்களை விடுவிக்கும். சனிபகவானும் இதுவரை அவர் வழங்கிய சங்கடங்களுக்கு ஆறுதல் புரிவது போல் நற்பலன்களை இக்காலத்தில் தருவார்.

**அதிர்ஷ்ட காலம்**

அவிட்டம் நட்சத்திரத்தில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலமான டிசெ.20. 2023 - பெப்.15. 2024 வரையிலும் பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29. 2025 - ஜூலை 2. 2025 வரையிலும் நவ 17. 2025 - மார்ச் 6. 2026 வரையிலும் அஸ்தமனம், வக்கிர நிலைகளிலும் சனிபகவானால் உண்டாகும் சங்கடமான பலன்களில் இருந்து உங்களுக்கு விடுதலை உண்டாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். வியாபாரம், தொழில் முன்னேற்றம் அடையும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26. 2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் உங்கள் முயற்சிகள் யாவும் வெற்றியாகும். பொருளாதார நிலை உயரும். எடுத்த காரியங்கள் யாவற்றிலும் முன்னேற்றமும் லாபமும் உண்டாகும். தொழில் சிறப்படையும். ஆரோக்கியம் சீராகும். எதிர்பாராத பணவரவு ஏற்படும். விரோதிகளை வெற்றி கொள்ளும் நிலை உண்டாகும். ஏப். 26.2025 முதல் ராகு கும்பத்திலும் கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் உங்கள் செயலில் தடுமாற்றம் உண்டாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். முயற்சி இழுபறியாகும். குடும்பத்தில் நெருக்கடி தோன்றும். உடல்நிலை ஒரு நேரம் இருப்பது போல் மறு நேரம் இல்லாமல் போகும்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30. 2024 வரை சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் மனதில் தேவையில்லாத ஆசைகள் [illegible] நடை போடுவீர்கள். தொழிலில் கவனம் செலுத்த முடியாத அளவிற்கு சந்தோஷத்திற்குள் மூழ்குவீர்கள். சிலர் புதிய வாகனங்கள் வாங்குவர். வீட்டை உங்கள் ரசனைக்கேற்ப மாற்றி அமைப்பீர்கள். தாயாரின் உடல்நிலையில் நன்மை உண்டாகும். தாய்வழி சொத்துகள் வந்து சேரும். மே 1.2024 - மே 13. 2025 இல் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் செல்வாக்கு உயரும். வருமானம் அதிகரிக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும். குடும்பம், தொழில், உத்தியோகம் போன்றவற்றில் இருந்த சங்கடம் விலகி நன்மை அதிகரிக்கும். பட்டம், பதவி என்ற உங்கள் ஆசை பூர்த்தியாகும். சமூகத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். மே 14. 2025 முதல் சத்ரு ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் எதிர்பாராத சங்கடங்கள் தோன்றும். தொழிலில் எதிர்ப்பு உண்டாகும். போட்டியாளர்கள் அதிகரிப்பர். உடல்நிலையில் பாதிப்பு உண்டாகும். வம்பு வழக்கு என்ற நிலைக்கு ஆளாவீர்கள்.

**பொதுப்பலன்**

சனி பகவான் 2 ஆம் இடத்தில் சஞ்சரித்தாலும் கடந்த ஐந்தாண்டுகளில் அவர் வழங்கிய சங்கடப் பலன்களை இப்போது வழங்க மாட்டார். மற்ற கிரகங்களின்




**20.12.2023-06.03.2026**

சஞ்சார நிலைகளும் சாதகமாக இருப்பதால் பெருமளவில் நன்மையே அடைவீர்கள். விருப்பம் நிறைவேறும். குடும்பத் தேவை பூர்த்தியாகும். தொழில் உத்தியோகம் போன்றவற்றில் கவனமாக செயற்படுவீர்கள். விரும்பிய இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். அதிகாரம் அந்தஸ்து என்ற நிலை ஏற்படும். அரச வகையில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**தொழில்**

தொழில் மீதான அக்கறை அதிகரிக்கும். சிலர் புதிய தொழில் தொடங்குவர். தொழிலை விரிவு செய்வீர்கள். பங்கு வர்த்தகம், ஏற்றுமதி இறக்குமதி, பேக்ரி, எலக்ட்ரானிக்ஸ், ஆட்டோமொபைல்ஸ், டிராவல்ஸ், கம்யூட்டர், சினிமா, இன்ஜினியரிங் போன்ற தொழில்கள் முன்னேற்றம் அடையும். விவசாயம் செழிப்படையும். தகவல் தொடர்பு சாதனங்கள் விற்பனையில் முன்னேற்றம் ஏற்படும்.

**கல்வி**

இக்காலத்தில் படிப்பில் இருந்து கவனம் சிதறும். அதிக முயற்சி எடுத்து படிப்பவர்களுக்கு எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்கும். ஆசிரியர்களின் ஆலோசனை இக்காலத்தில் மிகவும் அவசியம். தேர்வுக் காலம் வரை நட்பு, பொழுதுபோக்கு போன்றவற்றை ஒத்திவைப்பதால் மேற்படிப்பு குறித்த கனவு நிறைவேறும்.

பரிகாரம் சனீஸ்வரர், துர்க்கை, ஐயப்பனுக்கு அர்ச்சனை செய்து வழிபட சங்கடம் அனைத்தும் தீரும். அவிட்டம் 1,2ஆம் பாதம் முயற்சி தள்ளிப்போகும்.

தைரிய, வீரிய, பராக்கிரமக் காரகன் எனப்படும் செவ்வாய் பகவான் நட்சத்திரத்தில் நீங்கள் பிறந்திருந்தாலும் முதல் இரண்டு பாதங்களில் பிறந்தவர்களுக்கு மகரமும் 3,4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு கும்பமும் ராசிகளாகவும் சனி பகவானே இராசிநாதனாகவும் உள்ளார்.

செவ்வாய், சனியின் அம்சத்தில் நீங்கள் பிறந்தாலும் கோச்சார ரீதியாக சனிபகவான் சஞ்சரிக்கும் காலங்களில் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்கேற்ப பலன்களை கர்ம வினைக்கேற்ப வழங்கக் கூடியவராகிறார். அவிட்டம் 1.2ஆம் பாதங் களில் பிறந்தவர்களுக்கு பாத சனியாகவும் 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஜென்ம சனியாகவும் சஞ்சரிக்கிறார்.

இதனால் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் குழப்பம், சங்கடம், வருமானத்தில் நெருக்கடி, முயற்சிகளில் இழுபறி, வாக்கை காப்பாற்ற முடியாத நிலை, உடல் நிலையில் ஏதேனும் சங்கடம், எதிர்பாராத விபத்து, வருமானத்தில் தடை, பணம் பலவழிகளிலும் பறந்தோடும் என்பது பொதுவான விதி.

**அதிர்ஷ்ட காலம்**

சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16. 2024 - ஜூன் 19. 2024 வரையிலும் நவ 4. 2024 - பெப் 27. 2025 வரையிலும் சனி அஸ்தமனம், வக்கிர காலங்களிலும் 4 பாதங்களில் பிறந்தவர்களுக்கும் சங்கடங்களில் இருந்து விடுதலையை வழங்குவார் சனிபகவான். இக்காலத்தில் நீங்கள் நினைத்ததை எல்லாம் நடத்திக்கொள்ள முடியும். குடும்பம், தொழில், உத்தியோகம் போன்றவற்றில் நன்மை அதிகரிக்கும். பணவரவில் இருந்த தடைகள் விலகும். உடல்நிலை சீராகும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு முயற்சிகள் யாவும் வெற்றியாகும். நினைத்ததை சாதிக்கும் சக்தியுண்டாகும். துணிச்சலுடன் செயற்பட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்ப்பு எல்லாம் நிறைவேறும். தொடர்ந்து வந்த சங்கடங்களில் இருந்து விடுதலையும் எதிர்பார்த்த வரவும் உண்டாகும். ஏப்.26. 2025 இற்கு பிறகு இந்த நிலை மாறும். சங்கடமான நிலை தோன்றும்.

**குரு சஞ்சாரம்**

அவிட்டம் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஏப்.30. 2024 வரை சுக ஸ்தானத்திலும் மே 1. 2024 - மே 13. 2025 வரை 5ஆம் ஸ்தானத்திலும் மே 14. 2025 முதல் சத்ரு ஸ்தானத்திலும் சஞ்சரிக்கும் குரு பகவான், 5ஆம் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் உங்கள் வாழ்வில் முன்னேற்றத்தையும் தொழிலில் வளர்ச்சி, வியாபாரத்தில் லாபத்தை உண்டாக்குவார். உத்தியோகத்தில் இருந்த பிரச்சினைகளை விலக்கி வைப்பார். எதிர்பார்ப்பை நிறைவேற்றி வைப்பார். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளை நடத்தி வைப்பார். பொன், பொருள் சேர்க்கையை உண்டாக்குவார்.

**பொதுப்பலன்**

அவிட்டம் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ராகு, கேது, குருவின் சஞ்சாரம் சாதகமான நிலையில் இருப்பதால் நினைத்த செயல்களில் வெற்றி உண்டாகும். வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அடைவீர்கள். செல்வாக்கு உயரும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும்.

**தொழில்**

அவிட்டம் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றியாகும். வெளிநாட்டு தொடர்புகள் ஆதாயத்தை உண்டாக்கும்.

**பணியாளர்கள்**

முதல் இரண்டு பாதங்களில் பிறந்தவர்களுக்கு முன்னேற்றமான பலன் உண்டாகும். பணிபுரியும் இடத்தில் மதிப்பு அதிகரிக்கும். பணியாளர்களின் செல்வாக்கு உயரும். விரும்பிய இடமாற்றம், பதவி உயர்வு ஏற்படும்.

**கல்வி**

முதல் இரண்டு பாதங்களில் பிறந்தவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவர். ஆசிரியர்களின் அறிவுரைகளை ஏற்று செயற்பட்டு எதிர்பார்த்த மதிப்பெண்களுடன் தேர்வில் வெற்றி பெறுவீர்கள்.

**உடல்நிலை**

1,2ஆம் பாதத்தினருக்கு உடலில் இருந்த சங்கடங்கள் விலக ஆரம்பிக்கும்.

**குடும்பம்**

முதல் இரண்டு பாதங்களில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் இருந்த சங்கடம் விலகும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். புதிய சொத்து வாங்கும் எண்ணம் நிறைவேறும். பதவி உயர்வு ஏற்படும். பொருளாதார நிலை உயரும்.

பரிகாரம் - குல தெய்வத்தை தினமும் வழிபட்டு வர சங்கடங்கள் மறையும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவின் தாக்குதலுக்கு பதிலடி கொடுத்த உக்ரைன்

## 2 குழந்தைகள் உட்பட 18 பேர் பலி



(கீவ்)

**உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ரஷ்யா மீது உக்ரைன் திடீர் ஏவுகணை தாக்குதல் நடத்தியதில் இரு குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்துள்ளனர்.**

மேற்கத்தேய நாடுகளின் உதவியுடன் உக்ரைன் படைகள் ரஷ்யாவுக்கு பதிலடி கொடுத்து வருகின்றன.

இதற்கிடையே சமீபத்தில் ரஷ்யா ராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலின் போது 122 ஏவுகணைகள் மற்றும் 36 டிரோன்கள் ஏவப்பட்டன. இதில் பொது மக்கள் 10இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், ரஷ்யாவின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக உக்ரைன் இராணுவம் ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

ரஷ்யாவின் பெல்கரோட் நகரில் நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் 2 குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்துள்ளதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொண்டுள்ள ரஷ்யா, சமீபகாலமாக தீவிரமாக வான் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

பெரும்பாலான ஏவுகணைகள் உக்ரைன் பகுதியை தாக்குவதால் அதிக அளவில் சேதம் ஏற்படுகிறது.

கீவ் உட்பட 6 நகரங்களைக் குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.(5-6)

# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் 200 பேர் பலி,158 பேர் காயம்




(காசா)

காசாவில் 24 மணித்தியாலங்களில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 200 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், சுமார் 158 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற செயற்பாட்டால் காசாவில் மேலும் பலர் உயிரிழக்கக் கூடும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

இதேவேளை, முற்றுகையிடப்பட்ட காசா பகுதியில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உணவு, உடை மற்றும் சுகாதாரப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக ஐக்கிய நாடுகள்சபையின்பெண்களுக்கான அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், உலக உணவுத் திட்டம் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து 14 ஆயிரத்துக்கும் அதிகமான காசாவில உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# 3 உளவு செயற்கைக்கோளை ஏவவுள்ள வடகொரியா



(பியாங்யாங்)

2024 ஆம் ஆண்டில் மேலும் 3 உளவுச்செயற்கைக் கோளை ஏவவுள்ளதாக வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை செய்து வரும் நிலையில் தென் கொரியா தன்னை பாதுகாத்துக் கொள்ள அமெரிக்காவுடன் நட்பு வைத்துள்ளது. இதன் காரணமாக அமெரிக்க போர் கப்பல்கள் கொரிய தீபகற்பத்தில் கால் பதித்துள்ளன.

இந்நிலையில், வடகொரியா அதிபர் கிம்ஜாங் உன் கூறுகையில், 2024ஆம் ஆண்டில் மேலும் 3 ராணுவ உளவு செயற்கைக் கோள்களை ஏவுவோம். அணு ஆயுதங்கள், நவீன ஆளில்லா போர் உபகரணங்களை கட்டமைப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா- தென் கொரியா இணைந்து எப்போது வேண்டுமென்றாலும் வடகொரியா மீது போர் தொடுக்கலாம். இதனால் அமெரிக்கா தலைமையிலான படையெடுப்பை முறியடிக்க, தொடர்ந்து தயார் நிலையில் இருக்கும்படி வடகொரிய ராணுவத்தை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கிடையே, வடகொரியா சமீபத்தில் இராணுவ உளவு செயற்கைக்கோளை வெற்றிகரமாக ஏவியது. இதற்கு தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# சீனாவுக்கு பதிலடி கொடுக்க ரஷ்யாவுடன் இணைந்த இந்தியா

(டில்லி)

சீனா உரிமை கோருகின்ற தென்சீனக் கடலிலேயே "ரஷ்யாவுடன்" இணைந்து நின்று பதிலடி தர இந்தியா தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

சென்னையில் இருந்து தென்சீனக்கடல் வழியே ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் துறைமுகத்தை இணைக்கும் கடல்வழி பாதையை தொடங்குவதில் மத்திய அரசு கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவின் அண்டை நாடுகளையும் இந்தியாவிடம் இருந்து பிரித்து இந்திய பெருங்கடலில் தமது கடல் வழி வர்த்தக பயணத்தை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் சீனாவின் இத்தகைய முயற்சிகளுக்கு பதிலடியாக ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் துறைமுகத்துக்கான கடல் வழி வர்த்தக பாதை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அண்மையில் ரஷ்யா சென்ற மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் இருந்து ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் துறைமுகத்துக்கான கடல் வழி பாதையை உருவாக்குவது தொடர்பாக ரஷ்யா ஜனாதிபதி புடினுடன் ஆலோசனை நடத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 366





"ஐயையோ! யானை மந்தையில் நாம் அகப்பட்டுக் கொண்டால்!"

"அதைப் பற்றிக் கொஞ்சமும் பயமில்லை. மந்தையில் வரும் யானைகள் நம்மை ஒன்றும் செய்துவிடமாட்டா. நாம் ஒதுங்கி நின்றால் அவை நம்மைத் திரும்பி கூடப் பாராமல் வழியோடு போய் விடும்!"

இதற்குள் அவர்களுடன் வந்த வீரர்களில் ஒருவன் ஒரு மரத்தின் மேல் ஏறி நாலு பக்கமும் பார்த்தான்.

"ஐயா! ஐயா! ஒற்றை யானை வருகிறது! மத யானை! மரங்களை முறித்து அதம் செய்து கொண்டு வருகிறது!" என்று கூவினான்.

"ஐயோ! இது என்ன சங்கடம்! எப்படித் தப்புவது!" என்று ஆழ்வார்க்கடியான் பீதியுடன் கூறி அங்குமிங்கும் பார்த்தான்.

"மந்தை யானைகளுக்குப் பயமில்லை என்றீர். ஒற்றை யானைக்கு ஏன் இவ்வளவு பயம்!" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"அப்பனே! மதங்கொண்ட ஒற்றை யானை சாதாரண ஆயிரம் யானைகளுக்குச் சமமானது. அதன் மூர்க்கத்தனத்துக்கு முன்னால் யாரும் எதிர்த்து நிற்க முடியாது."

"எங்கள் மூன்று பேர் கையில் வேல் இருக்கிறது. உம்முடைய கையில் ஒரு தடி இருக்கிறதே!"

"ஒரு மத யானையை ஆயிரம் வேல்களாலும் எதிர்க்க முடியாது. அதோ ஒரு செங்குத்தான குன்று தெரிகிறதே! அதில் நாம் ஏறிக்கொண்டால் ஒருவேளை தப்பித்துக் கொள்ளலாம் ஓடிப்பாருங்கள்!"

இவ்வாறு சொல்லி ஆழ்வார்க்கடியான் குன்றை நோக்கி ஓடினான். மற்றவர்களும் பின் தொடர்ந்தார்கள். ஆனால் கொஞ்ச தூரம் ஓடியதும் எதிரில் ஓர் ஆழமான செங்குத்தான பள்ளத்தாக்கு இருப்பதைப் பார்த்தார்கள்.

அவர்கள் நின்ற இடத்துக்கும் சற்றுத் தூரத்தில் இருந்த குன்றுக்கும் மத்தியில் அந்தப் பள்ளத்தாக்கு இருந்தது. பள்ளத்தாக்கின் விளிம்பில் வந்து அவர்கள் நின்றார்கள்.

யானையோ அதிவேகமாக அவர்களை நெருங்கி வந்து கொண்டிருந்தது. மனிதர்களைப் பார்த்ததும் அதன் வெறி அதிகமாகியிருக்க வேண்டும்.

துதிக்கையைத் தூக்கிக் கொண்டு அந்த மத யானை பிளிறிய போது அதன் சப்தத்தில் அண்ட கடாகங்கள் வெடிக்காமலிருந்தது அதிசயந்தான். அதைக் கேட்ட மனிதர்கள் நாலு பேரும் காதைப் பொத்திக் கொண்டார்கள். தலைக்கு ஒரு பக்கம் சிதறி ஓடினார்கள்.

யானை மேலும் நெருங்கி வந்தது. மேலும் மேலும் நெருங்கி வந்தது. ஆழ்வார்க்கடியானைக் குறி வைத்துக் கொண்டு, அவன் நின்ற இடத்தை நோக்கி அது வருவது போலத் தோன்றியது.

இன்னும் இரண்டு அடி அப்பால் எடுத்து வைத்தால் ஆழ்வார்க்கடியான் அதல பாதாளத்தில் விழும்படி நேரிடும். பக்கவாட்டில் ஓடுவதற்கும் வசதியாக இல்லை. செடி, கொடிகள் அடர்ந்திருந்தன் ஓடித் தப்பிக்கத்தான் முடியுமா?

வந்தியத்தேவன் கையில் வேலை எடுத்தான். ஆனால் அந்த மதயானையின் வேகத்தை இந்திரனுடைய வஜ்ராயுதத்தினால் கூட அச்சமயம் தடுக்க முடியாது என்று அவனுக்குத் தோன்றியது. வேலைப் பிடித்த கை பலவீனமுற்றுத் தளர்ந்து சோர்ந்தது.

அந்நேரத்தில் ஆழ்வார்க்கடியானுடைய செய்கை வந்தியத்தேவனுக்கு ஒரு பக்கத்தில் சிரிப்பை உண்டாக்கிற்று.

கையில் தடியை ஓங்கிய வண்ணம், "நில், நில்! அப்படியே நில்! மேலே வந்தாயோ தொலைந்தாய்! உன்னைக் கொன்று குழி வெட்டி மூடி விடுவேன்! ஜாக்கிரதை!" என்று ஆழ்வார்க்கடியான் மதயானையைப் பார்த்து இரைந்தான்!

(தொடரும்..)



# சிறுவர் அரங்கம்

## முத்திரை மோதிரத்தின் மகிமை



சக்கரவர்த்தி அக்பர் பொது மக்களைத் தன் சபையில் நேரடியாக சந்தித்துக் குறைகளை விசாரிப்பார் என்ற செய்தி கேட்டு அந்தக் கிழவி பரபரப்படைந்தாள். சமூகத்தில் மிக செல்வாக்குடைய குல்ஷா என்ற பணக்கார பிரபுவின் முகத்திரையைக் கிழிக்க அவள் துடித்தாள். ஆனால், தான் அந்தப் பிரபுக்கெதிராக கூறப்போகும் புகாரை அக்பர் நம்புவாரா என்ற சந்தேகமும் ஏற்பட்டது. எதற்கும் அவரை சந்திப்பது என்ற முடிவுக்கு வந்தாள்.

மறுநாள் கிழவி தயங்காமல் தர்பாருக்கே சென்றுவிட்டாள். வாயிற்காவலர்கள் அவளைத் தடுத்தி நிறுத்தி என்ன வேண்டும் என்று வினவியபோது, தான் சக்கரவர்த்தியை நேரில் சந்திக்க விரும்புவதாக அவள் கூறினாள். உடனே, ஒரு காவலன் அவள் கையைப் பிடித்து அழைத்துச் சென்று தர்பாருக்குள் நுழைந்தான்.

சிம்மாசனத்தில் வீற்றிருந்த அக்பரைக் கண்டு தரையைத் தொட்டு சலாம் செய்ய அவள் முயன்ற போது, அவளை கவனித்த அக்பர் அவளுடைய முதிர்ந்த வயதை மனத்தில் கொண்டு அவளை சிரமப்படாமல் இருக்க சைகை செய்தார். பிறகு, "அம்மா! உனக்கு என்ன வேண்டும்?" என்றார். அதற்கு அவள் அக்பரை நோக்கி, "பிரபு! நான் சுந்தரிபாய். மிக ஏழையானவள் என்றாள்.

அதற்கு அக்பர், "ஏழையாயினும், பணக்காரராயினும் என் முன் சமநீதி கிடைக்கும். உன் குறையென்ன சொல் தாயே!" என்றார்.

"பிரபு! ஓராண்டு முன் நான் பத்ரிநாத் யாத்திரை செல்ல விரும்பினேன். என்னிடமுள்ள பணத்தையெல்லாம் அதுவரை யாரிடமாவது பத்திரமாக விட்டுச் செல்ல வேண்டுமே என்று திட்டமிட்டேன். என்னுடைய உடைமைகளைப் பொற்காசுகளாக மாற்றி ஒரு பையில் போட்டு, வாயை இறுகக் கயிற்றினால் கட்டி விட்டேன்.

பிறகு, கயிற்றின் முடிச்சின் மேல் மெழுகை உருக்கி ஊற்றினேன். புறாச்சின்னம் உள்ள என் மோதிரத்தை உருகிய மெழுகில் அழுத்தி, முடிச்சை சீல் செய்தேன். சீலில் என் மோதிரத்தின் புறாச் சின்னம் தெளிவாகக் காணப்பட்டது" என்று மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டே போனவளை அக்பர், "அம்மா! நீ மிகவும் முன் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டு இருக்கிறாயே! சபாஷ்!" என்று பாராட்டினார்.

"[illegible] அந்தப் பையை மிக கௌரவமான மனிதர் என்று கருதப்படும் குல்ஷாவிடம் நேரில் சென்று கொடுத்தேன். நான் பத்ரிநாத் சென்று வரும் வரை பத்திரமாகப் பாதுகாக்கும்படி வேண்டினேன். அந்தச் சமயம் கூட யாருமில்லை. என்னுடைய பையை அவர் தன் கையினால் தொடக் கூட இல்லை.

என்னை வீட்டின் பின்புறம் அழைத்துச் சென்றவர், அங்கு ஒரு குழியைத் தோண்டி, அதனுள் அந்தப் பையைப் போடும்படி சொன்னார். நானும் அப்படியே செய்ய, பிறகு அதை மண்ணைப் போட்டு மூடி விட்டார். பிறகு என்னிடம் பிரயாணம் முடிந்து வந்த பிறகு நானே குழியைத் தோண்டி எடுத்துக் கொள்ளலாம் என்றார்.

"மிக உத்தமமான மனிதர் என்று மனத்தில் அவளுக்கு மரியாதை செலுத்திவிட்டு, நேரில் அவருக்கு நன்றி கூறித் திரும்பினேன். பிறகு பத்ரிநாத் யாத்திரை முடிந்தபின், நான் அவரிடம் செல்ல அதே இடத்திற்கு அவர் என்னை அழைத்துச் சென்றார். நான் குழியைத் தோண்டி, புதைத்து வைத்திருந்த என் பையை எடுத்துக் கொண்டேன். குலுக்கினால் உள்ளே நாணயங்கள் குலுங்கும் ஒலிகேட்டு திருப்தி அடைந்து வீட்டுக்குத் திரும்பினேன். பையின் கயிற்றின் முடிச்சும் அதில் நான் வைத்திருந்த சீலும் அப்படியே இருந்தது.

"ஆனால், என்னவென்று சொல்வது! வீட்டுக்கு வந்து, பையைத் திறந்து பார்த்தால் உள்ளே தங்க நாணயங்களுக்கு பதிலாக செப்பு நாணயங்கள் இருந்தன. குல்ஷா போன்ற கௌரவமான மனிதர் இப்படி ஓர் ஏழைக்கிழவியை மோசம் செய்வார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை" என்று கண்ணீர் வடித்தாள்.

பையிலுள்ள கயிற்றின் முடிச்சை அவிழ்க்காமல் உள்ளிருக்கும் பொற்காசுகளை எப்படி வெளியே எடுத்து செப்புக்காசுகளை நிரப்ப முடிந்தது என்று அக்பருக்குப் புரியவில்லை. அதே சமயம் கிழவி பொய் சொல்கிறாளே? என்று சந்தேகமும் எழ, அக்பர் பதில் சொல்ல முடியாமல் குழம்பிப் போய் பீர்பாலை நோக்க, பீர்பால் "பிரபு! இதை நான் தீர்த்து வைக்கிறேன்" என்றார். அக்பர் நிம்மதியுடன் ஒரு பெருமூச்சு விட்டார்.

அடுத்து பீர்பால், "பிரபு! பொற்காசுகள் இருந்ததாகக் கூறப்படும் அந்தப் பையினை நான் பார்க்க விரும்புகிறேன்!" என்று கூறி, அதைக் கிழவியிடமிருந்து வாங்கிக் கொண்டார்.

அதை மேலும் கீழுமாகப் புரட்டி உற்று கவனித்த பீர்பாலின் புருவங்கள் நெரிந்தன. அதில் ஏதோமர்மம் இருப்பதாகப் புரிந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை எனும் கண்கொண்டு பார்க்க வேண்டுமானால் பகுத்தறிவுக் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும்.
~ ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிறக்கின்ற 2024ஆம் ஆண்டு அனைத்து வழிகளிலும் சிறப்பாகட்டும்

2024ஆம் ஆண்டின் பிறப்பு இன்று. 2023ஆம் ஆண்டுக்குப் பிரியாவிடை கொடுத்து 2024ஆம் ஆண்டை உலகம் முழுவதும் வரவேற்று நிற்கிறது.

புத்தாண்டு எல்லோருக்கும் சிறப்பைத் தர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்போமாக.

தவிர, 2023ஆம் ஆண்டு தந்துபோன துயரங்களை மறப்போம். அதிலிருந்து விடுபட்டு பிறந்திருக்கின்ற 2024ஆம் ஆண்டில் நல்லவை நடக்க வகை செய்வோம்.

கூடவே எங்கள் தமிழினத்தின் உரிமையை வென்றெடுக்கப் புதுவழியில் வியூகம் அமைப்பது அவசியம்.

அதுதவிர, எமது தமிழர் தாயகத்தின் அபிவிருத்தி பற்றியும் நாம் சிந்திப்பது மிகவும் அவசியமாகின்றது.

உண்மை. முப்பது ஆண்டு கால யுத்தம் எங்களை 50 ஆண்டுகள் பின்னோக்கிய கால சூழ்நிலைக்கு இட்டுச் சென்றது.

இதனால் எங்கள் பிள்ளைகளின் கல்வி தொடக்கம் எம் மக்களின் சமூக பொருளாதார நிலைமைகள் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எனினும் தமிழ் மக்களின் உரிமை பற்றிக் கதைக்கின்ற நாம் எம் மக்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலைமைகள் பற்றிக் கதைக்கவும் சிந்திக்கவும் தவறிவிட்டோம்.

இதன் விளைவு எங்கள் இளம் சமூகத்தைக் கடுமையாக தாக்கியுள்ளது.

ஆம், முப்பது ஆண்டு காலம் எங்கள் தாயகத்தில் நடந்த விடுதலைப் போராட்டம் பற்றி இன்றைய இளம் சமூகம் அறிந்திருப்பது என்னவென்று யாரேனும் தெரிந்து கொள்ள முற்பட்டால் வேதனையான முடிவுகளே நமக்குக் கிடைக்கப் பெறும்.

அந்தளவுக்கு எங்கள் மண்ணில் நடந்த தியாகங்கள் இளம் சந்ததியினரிடம் கடத்தப்படவில்லை.

அவ்வாறான முயற்சிகளில் அரசியல் தரப்புகள் ஈடுபடவும் இல்லை.

நம் அரசியல் தரப்புக்களைப் பொறுத்தவரை அவர்களின் ஒவ்வொரு அசைவும் தங்களின் வாக்கு வங்கியை தக்கவைப்பதும் நிரப்புவதுமாகவே இருக்கிறது.

இதன் காரணமாக அவர்கள் தங்களை மையப்படுத்தியதாகவே சிந்திக்கின்றனர்.

உண்மையில் இன விடுதலைப் போராட்டம் என்பது மக்கள் சமூகத்தை இணைத்த போராட்டமாக இருக்க வேண்டும். ஆனால் எங்கள் மண்ணில் மக்கள் ஒருபுறம்; அரசியல் தரப்புகள் இன்னொரு புறம். இந்த நிலைமை ஒரு போதும் இலக்கை வென்றெடுக்க உதவமாட்டாது.

ஆகையால் எமது உரிமை உள்ளிட்ட அனைத்து வழிகளிலும் நம் தமிழினம் சிறந்து விளங்குவதற்கான திட்டங்களை சமாந்தரமாக அமுல்படுத்த வேண்டும்.

இதற்கு தமிழ் அரசியல் தரப்புகளிடையே பொது ஒற்றுமை அவசியம்.

இல்லையென்றால், தமிழ் அரசியல் கட்சிகளின் சிறு சிறு போராட்டங்களும் கோசங்களும் அவர்களின் இருப்புக்கானதேயன்றி வேறில்லை என்பதே பொருள்.

ஆகையால் பிறந்திருக்கின்ற 2024 புத்தாண்டில் எங்கள் இளம் சமூகத்தை வழிப்படுத்துவதில் அதீத கவனம் செலுத்தி, எங்கள் இனத்தின் கட்டமைப்பை உறுதி செய்வது மிக மிக அவசியமானதாகிறது.

# பணம் பறிக்கும் தனியார் பாடசாலைகளை அரசு உன்னிப்பாகக் கவனிக்கும்

(கொழும்பு)

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கு அநியாயமாக பெருந்தொகைப் பணம் அறவிடப்படுவதை நிறுத்துவதற்குக் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த வாரம் இடம்பெற்றதுடன், புத்தாண்டில் அமைச்சின் புதிய செயலாளராக வசந்த பெரேரா நியமிக்கப்படவுள்ள நிலையில், இது தொடர்பில் விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எண். 618 - பாடசாலைகள் மற்றும் தொழிற் கல்லூரிகள் சட்டத்தின் பிரகாரம் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் சேரும் மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்க முடியாது.

அந்தப் பாடசாலைகளில் உள்ள ஆறாயிரம் ஆசிரியர்களுக்கு அரசு ஆண்டுதோறும் இருநூற்று ஐம்பத்து மூன்று கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கிறது. மேலும் அப்பிள்ளைகளுக்கு பாடப் புத்தகங்களும் மற்றும் சீருடைகளும் இலவசமாக வழங்கப்படுகிறது.

இருந்த போதிலும், அந்தப் பள்ளிகளில் சேரும் மாணவர்களிடம் நியாயமற்ற கட்டணம் வசூலிப்பது குறித்து அமைச்சுக்கும் அவ்வப்போது புகார்கள் வருவதாகவும் மேற்கண்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-7)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வியூகம் அமைக்கிறார் ரணில்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலுள்ள கட்சிகளுடன் கலந்துரையாடல்களினை மேற்கொள்வதனூடாக ஜனாதிபதித் தேர்தலுக்கான வியூகத்தினை ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ளார்.

பொதுஜன பெரமுன சார்பில் தான் போட்டியிட விரும்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரகசிய கோரிக்கையினை ஏலவே கட்சியிடம் முன்வைத்திருந்தார்.

ஆயினும் பொதுஜன பெரமுன சார்பில் பொது வேட்பாளராக தம்மிக்க பெரேராவை நியமிக்கத் திட்டம் தீட்டப்பட்டு வரும் நிலையிலேயே ஜனாதிபதித் தேர்தலில் பொது ஜன பெரமுனவின் கூட்டணியிலுள்ள சில கட்சிகளின் ஆதரவினை பெறுவதனூடாக ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வியூகம் வகுத்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-7)

## பழுதடைந்த விதை உருளைக்கிழங்கு பதிப்படைந்தவர்களுக்கு நட்டஈடு

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - குப்பிளான் பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்குகள் பழுதடைந்தமையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நட்ட ஈட்டை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் வழங்கப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்குகள் ஒருவகை பாக்டீரியா தாக்கத்துக்கு உள்ளாகிப் பழுதடைந்த நிலையில் இது குறித்த ஆய்வறிக்கை அமைச்சரிடம் கையளிக்கப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், விதை உருளைக்கிழங்குகள் பழுதடைந்த விவகாரம் தொடர்பில், தரகு பணம் கைமாற்றப்பட்டமைக்கான சாத்திய கூறுகள் தென்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் விவசாய நவீனமயமாக்கல் செயல்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்காக சுமார் 21 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்குகள் இறக்குமதி செய்யப்பட்டன.

குறித்த விடயத்தில், தவறு செய்தவர்கள் எவராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் அதேநேரம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நட்ட ஈட்டை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## பிறந்து ஒரு நாளேயான சிசு சடலமாக மீட்பு

(மகல்தெனிய)

மகல்தெனிய வயமுடுக்குவ சந்திக்கு அருகில் உள்ள கால்வாயில் சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக லியாங்கஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

பிறந்து ஒரு நாளேயான சிசுவின் சடலம் கால்வாயில் கிடப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் மீட்கப்பட்ட போது குறித்த சிசு சிதைந்து துர்நாற்றம் வீசியதாகவும் இந்த சிசுவை ரகசியமாகப் பிரசவித்து கால்வாயில் வீசியிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## அச்சுவேலியில் டெங்கு கட்டுப்படுத்த புகையூட்டல்

அச்சுவேலி பகுதியில் டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் நேற்று மாலை புகையூட்டும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

கோப்பாய் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் குட்பட்ட அச்சுவேலி பகுதியில் அண்மைக் காலமாக டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் பொது சுகாதார பரிசோதகர்களால் வீட்டுத் தரிசிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக நேற்று அச்சுவேலி பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் புகையூட்டப்பட்டன. (ந-7)

## மர்மக் காய்ச்சல்; மற்றுமோர் கைதி பலி

(மாத்தறை)

மாத்தறை சிறைச்சாலையில் மர்மக் காய்ச்சலினால் சிறைக் கைதி ஒருவர் அண்மையில் உயிரிழந்த நிலையில் மேலும் பல கைதிகளிடமும் காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டதையடுத்து அவர்களுக்குரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் மர்மக்காய்ச்சல் காரணமாக மாத்தறை வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த மற்றுமோர் கைதியும் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## அகத்தியரின் ஜனன தினமான மார்கழி ஆயிலிய நட்சத்திர தினத்தை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

அகத்தியரின் ஜனன தினமான மார்கழி ஆயிலிய நட்சத்திர தினத்தை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

அகத்தியர் சித்த மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார். (Agasthiyar father of siddha Medicine) பொதுவாக அகத்தியரை வண்டமிழ் மாமுனி, கும்பமாமுனி, சங்கத்தமிழ் தந்தவர், அறிவன், முத்தண்டமிழ் தேர்முனி, தமிழ்ர் கோமான், ஆதிமுனி, குறுமுனி எனப் பல வேறு பெயர்களால் அழைத்துள்ளனர்.

தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்தவர் அகத்தியர் என்ற மரபும் உண்டு. மறைந்து விட்ட வரலாறு மரபு என்ற பெயரில் தொடர்கின்றது. இவர் பெயரில் காணப்படும் வைத்திய நூற் பெயரைக் கொண்டு சித்தர் வரிசையில் முதலானவர் என்றும் கூறப்படுகின்றது.

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் அகத்தியரே இப்படிப்பட்ட பெருமையைப் பெற்றிருக்கலாம். அகத்தியருடைய மாணாக்கர இடைச் சங்கத்தில் இருந்த தொல்காப்பியர் என்றும் தொல்காப்பியரும் தமிழுக்கு இலக்கணம் வகுத்துள்ளார் என்றும் க.சு உத்தமராயன குறிப்பிடுகின்றார்.

இவர் குடத்தில் பிறந்ததால் குடமுனி என்றும் அழைக்கப்பட்டார். பதிணெண் சித்தர்களுள் முதன்மையானவரை அதிகம் தவம் செய்ததால் மாதவ முனிவர் என்றும் அழைக்கப்பட்டார். தமிழ் இலக்கணம் அதிகம் எழுதியதால் தமிழ் முனிவர் என்றும் பிறப்பு பெயரால் அழைக்கப்பட்டார். முனிவருக்கெல்லாம் குருவானதால் குருமுனி எனவும் அழைக்கப்பட்டார். பொதிகை மலையில் வாழ்ந்தவர் என்பதால் பொதியை முனி எனவும் அழைக்கப்பட்டார்.

சித்தராய் விளங்கிய அகத்தியனைப் பற்றிய "அகத்தியன் காவியம் பன்னிரண்டாயிரம" வாயிலாகச் சில கருத்துக்களை மட்டுமே தெரிந்து கொள்ள முடிகிறது.

அகத்தியன் அனந்த சயனம் என்ற திருவனந்தபுரத்தில் சமாதியடைந்ததாகக் கூறப்படுகின்றது. ஒரு சிலர் அவர் கும்பகோணத்தில் உள்ள கும்பேசுவரர் கோவில்



மகான் அகத்திய முனிவர்

சமாதி கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். அகத்தியன் தூங்கெயில் எறிந்த தொடிந்தோட் செம்பியன் காலத்தில் காவிரி பூம்பட்டிணத்தில் இந்திர விழாவை எடுப்பித்தவர் ஆவார்.

புதுச்சேரிக்கு அருகிலுள்ள உழவர்கரை என்ற இடத்தில் ஆசிரமம் அமைத்து வேதபுரி பல்கலைக் கழகத்தில் தமிழைப் போதித்தார். எனவே அவர் தங்கியிருந்த பகுதி அகஸ்த்தீஸ்வரம்" என்று அழைக்கப்பட்டு அங்கு பெரிய சிவாலயம் கட்டப்பட்டது. அதனை அகஸ்தீஸ்வரமுடைய ஆலயம் என்றும் அழைக்கின்றனர்.

அகத்தியர் திருகைலாயத்திலிருந்து தெற்கே வந்த வரலாறுகள் பல புராணங்களில் கூறப்பட்டிருக்கின்றன. திருக்கரையம்பதிக்கும் வந்தார். இலிங்க ஸ்தாபனம் செய்தார் என்பது கரைசைப் புராணத்தில் கூறப்படுகிறது. அகத்தியர் ஒருவரா? பலரா, என்ற ஆராய்ச்சி வேறு விடயம். கரைசைப் புராணத்தில் கூறப்படும் அகத்தியர் தமிழ் மக்கள் வாழ்ந்ததும், குறுநில மன்னர்களால் ஆளப்பட்ட தவம் செய்வதற்குரிய இயற்கை அமைவுகளை உடையதுமான திருக்கரைசையம் பதிக்கு வந்து, சிவன் கோயிலைக் கட்டியிருந்தார். அந்த ஆலயம் அழிந்து காடடர்ந்து பெரும் வனமாயிருந்த போதிலும் தெய்வ சாந்தியம் நிறைந்த இடமாயிருப்பதை உணரக்கூடியதாயிருந்தது.

இதற்கருகிலுள்ள மகாவலிகங்கைக் கரையிலே தான் சுமார் 300 வருடங்களுக்கு மேலாக ஆடியமாவாசையன்று கங்குவேலிச் சிவன் கோவிலில் இருந்து. கமலேஸ்வரி அம்பாள் சமேதரராகக் கமலேஸ்வரப் பெருமாள் அகத்தியர் ஸ்தாபனத்துக்குச் சமீபமாகவுள்ள மகாவலி கங்கைக் கரைக்கு எழுந்தருளி வருவார் இந்தத் தீர்தோற்சவம் கரைசயம்பதியில் பெருவிழாவாகக் கொண்டாடப்படும். கொட்டியாபுரப் பற்றிலுள்ள. பல கிராம மக்களும் திருகோணமலை,' தம்பலகாமத்து மக்களும் தீர்த்தமாட அங்கு வருவார்கள். முதல் நாளிரவு தீர்த்தக்கரையில் சமய, கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

அன்றிரவு முழுவதும் திருக்கரைசைப் புராணம் படித்துப் பயன் சொல்லி நிறைவேற்றுவார்கள். உதயத்தில் தீ மிதிப்பு வைபவம் நிகழும். அதைத் தொடர்ந்து சுவாமியும் மக்களும் தீர்த்தமாடுவார்கள். பயங்கரமான மகாவலி கங்கைக்கரை, காடு ஆடிய மாவாசை இருட்டிலும் தேவலோகம் போல பிரகாசமாகக் காட்சியளிக்கும்.

கங்குவேலி சிவன் கோவிலில் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. 17 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தர் திருகோணமலையை ஆண்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். அதனை ஆய்வு செய்த கல்வெட்டு ஆய்வாளர்கள் "மலையில் வன்னிபமும் எழுநிலை அடப்பர்களும் இருபகை முதன்மைகளும் தானவரிப்பத்தரும் கூடி கோணேஸ்பெருமானுக்கு கங்குவேலியில் மானியமாக வழங்கப்பட்ட வயல் பிரயோசனங்களையும் மற்றுமுள்ள பிரயோசனங்களையும் எடுத்துக் கோணேசப் பெருமானுக்குக் கொடுக்க வேண்டும். இதனை மாறுதலிப்பவர்கள் கங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்தை அனுபவிப்பார்கள்" என்று விளக்கந்தருகிறார்கள்.

பிரபல்யமான ஆலயங்களுக்குத்தான் கல்வெட்டுக்களும் புராணங்களும் எழுதப்பட்டிருக்கும். திருகோணமலை மாவட்டத்தில் இவைபோன்ற அநேகக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. திருக்கரைசையம்பதியில் அமைக்கப்பட்ட சிவன் கோவில் போல அகத்திய முனிவராற் சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்ட இடம் அகஸ்தியர் ஸ்தாபனம். திருக்கரைசைப் புராணம் இதனை விரிவாகக் கூறுகிறது.

அங்கு பிரசித்தி பெற்ற சிவன் கோயில் இருந்தமைக்குரிய ஆதாரங்கள் காணப்படுகின்றன. இயற்கை அழிவுக்குப்பின் சிவாலயம் இருந்த இடத்தில் லிங்கம், நந்தி, பலிபீடம், அஸ்சிரதேவர கோவில் வாயில் முகப்புக்கற்கள், கோமுகை, அபிஷேகத்துக்குரிய வாசனைத் திரவியங்கள், அரைக்கும், முக்கட்டுக் குழிக்கல், வாசற்படிக்கற்கள், தூண்கள், முதலியன ஆலயத்தின் எச்சங்களாக இருக்கின்றன.

அகத்தியன் தோற்றம் பற்றியும் சிறப்புச் செயல்கள் பற்றியும் பல கதைகள் உள்ளன.

தாரகன் முதலிய அரக்கர்கள் உலகை வருத்த, அவர்களை அழிக்க இந்திரன், வாயு, அக்கினி ஆகியோர் பூமிக்கு வந்தார்கள். இவர்களைக் கண்ட அசுரர்களோ கடவுக்குள் ஒழிந்தார்கள். இந்திரனின் யோசனைப்படி அக்கினி வாயுவுடன் கூடி பூமியில் விழுந்து அகத்தியனாய் அவதரித்தார் என்றும், பிரித்திரர் குடத்திலிட்ட வீரியத்திலிருந்து அகத்தியனும், வருணன் தண்ணீரில் இட்ட வீரியத்திலிருந்து வசிஷ்டரும் அவதரித்தனர் என்றும் பலவாறான கருத்துக்கள் நிலவுகின்றன.

இவ்வாறு பிறவிபெற்ற அகத்தியன் இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்க சமுத்திர நீர் முழுவதையும் குடித்து விட இந்திரன் அசுரர்களை அழித்தார் அதன் பின் நீரை மீண்டும் கடலுக்குள் விடுவித்தார் அகத்தியர்.

அகத்தியர் நீரின் மேல் படுத்தபடியே பன்னிரண்டாண்டுகள் கடுந்தவமியற்றி அரிய சக்திகளைப் பெற்றார். தம்முன்னோர்களுக்காக விதர்ப்ப நாட்டை அடைந்து அவ் வரசன் மகள் உலோபமுத்திரையை மணந்து தென்புலத்தார் கடனைத் தீர்த்தார்.

கைலையில் நடந்த சிவபெருமான் திருமணத்தின் போது வட திசை தாழ்ந்து தென் திசை உயர அகத்தியனை தென் திசைக்குச் செல்லுமாறு சிவபெருமான் கட்டளையிட்டார் . இதனால் தெற்கே மேருமலை நோக்கி பயணித்தார் அகத்தியர் மேருமலைக்கு செல்ல வழி விடாமல் நின்ற விந்திய மலை அகத்தியனை கண்டதும் பணிந்து தாழ்ந்து நின்றது. தான் தென்திசை சென்று வரும் வரையும் பணிந்து இருப்பாயாக என்று அவரிடம் கூறிச் சென்ற அகத்தியர் மீண்டும் வட திசையில் செல்லாதிருந்தார். ஆதலால் விந்தியமலையும் அதன் பின் உயரவில்லை என்று கூறப்படுகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைந்தது...

தேர்தலில் ஆதரிப்பதே எமது கூட்டணியின் பிரதான நோக்கம் என்றும் கூறினார்.

நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் படுமோசமாக சீரழிவுகளை எதிர்கொண்ட சந்தர்ப்பத்திலேயே எமது புதிய அரசியல் கூட்டணி உருவாக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த கூட்டணியில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களாகவும் பங்காளிக் கட்சிகளின் அங்கத்தவர்களாகவும் உள்ளனர்.

சிறந்த ஒரு நாட்டை உருவாக்கும் நோக்கில் பொதுஜன பெரமுனவை ஆதரித்திருந்தோம்.

ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் பொதுஜன பெரமுனவின் செயற்பாடுகள் நாட்டின் நலன் கருதி இல்லாது, வீண் நெருக்கடிகளை தோற்றுவிக்கும் வகையிலேயே காணப்பட்டது.

எனவேதான் பொதுஜன பெரமுனவிடமிருந்து விலகி சுயாதீனமாக செயற்பட பலரும் தீர்மானித்தனர். அவ்வாறு சுயாதீனமான பலரும் எம்முடன் இணைந்து புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளனர்.

கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வின்போது தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மற்றும் ஏனைய அரசியல் செயற்பாடுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ந-7)

## ஜனாதிபதி ரணில்...

வுள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 4ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி மாலை 3 மணி முதல் 5.30 வரை மாவட்டச் செயலகத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளார். அன்று மாலை 7 மணி முதல் 9.30 மணிவரை சிவில் சமூகப் பிரதிநிதிகளை அவர் சந்திக்கவுள்ளார்

தொடர்ந்து 5 ஆம் திகதி காலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட.ங்களுக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும், மாலை 2 மணி தொடக்கம் 3 மணி வரையில் பூநகரிப் பிரதேச அபிவிருத்தி மற்றும் நகர மயமாக்கல் தொடர்பில் பூநகரிப் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலிலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

6ஆம் திகதி காலை 9 மணி முதல் 10 மணி வரையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்ப்பாணம், வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர்கள் மற்றும் கிளிநொச்சி வளாகப் பீடாதிபதி உள்ளிட்ட விரிவுரையாளர்களுடனான சந்திப்பைத் தொடர்ந்து 10 மணிமுதல் 11.30 வரையில் சர்வமதப் பிரதிநிதிகள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் யாழ். போதனா வைத்திய சாலையின் நலன்புரிச் சங்கத்தின் பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்திக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி தலைமையில் மாலை 3 மணி முதல் 5 மணி வரை யாழ்.மாவட்ட செயலகத்தில் நிபுணர்களுடனான சந்திப்பும், 7 ஆம் திகதி தந்தை செல்வா மண்டபத்தில் பனை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான சந்திப்பும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அரச நிறுவனங்...

பெற வேண்டும் என பொது நிர்வாக அமைச்சு விசேட சுற்றறிக்கை ஊடாக அறிவுறுத்தியுள்ளது.

இதன்பிரகாரம் இன்று அரச ஊழியர்கள் ஒன்றுகூடி கடமைசார் சத்தியப் பிரமாணம் செய்து 2024ஆம் ஆண்டின் பணிகளை ஆரம்பிக்கவுள்ளனர். (ந-7)

## பாதாள...

பாதாள உலகத்தை ஒடுக்குவது கடினமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகப் புள்ளிகளை விடுவிப்பதற்காக பல்வேறு நிலைகளில் உள்ள அரசியல்வாதிகள் பொலிஸார் ஊடாக தலையிட்டுள்ளமையும் தெரியவந்துள்ளதாகவும் உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

சில அரசியல்வாதிகளுடனும் சில மதத் தலைவர்களுடனும் பாதாள உலகக் குழுவினர் தொடர்பில் இருப்பதாகவும் அந்த அரசியல்வாதிகளிடமிருந்து இவர்களுக்கு உயர் பாதுகாப்பு கிடைப்பதை அறிய முடிவதாகவும் புலனாய்வுத்துறை வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன. (ம-7)

## கொள்...

கொழும்பில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் இதனைத் தெரிவித்துள்ளார்.

"நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியின்போது பல வழக்குகள் மூடி மறைக்கப்பட்டன. ஆனால் எமது ஆட்சிக் காலத்தில் அந்த வழக்குகள் அனைத்தும் மீள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அதற்காக நீதித்துறைக்குத் தேவையான வளங்கள் வழங்கப்படும். ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் எமது ஆட்சியின்போது தப்பவே முடியாது.

நாம் "பைல்களை" காட்டிக் கொண்டு சும்மா இருக்கமாட்டோம். நல்லாட்சி காலத்தில் "டீல்" காரணமாக மறைக்கப்பட்ட பல வழக்குகள் உள்ளன.

இது குறித்து ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ஷக்களுக்கிடையில் உடன்படிக்கையும் உள்ளது.

இவ்வாறு மறைக்கப்பட்ட அனைத்து வழக்குகளும் மீள விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ந-7)


லக்கி 7 VIP
திகதி 2023.12.31
சீட்டிழுப்பு இலக்கம் 0171
W 9 6 4 4 6 2 W
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.12.31
சீட்டிழுப்பு இலக்கம் - 1375
Q 04 36 49 61 Q
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance 20591

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3587
சீட்டிழுப்பு திகதி | 31.12.2023
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
R 29 33 54 67
R 16847
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.31
சீட்டிழுப்பு இலக்கம் 0654
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 07 14 39 57 ரிஷபம்
54916 18

மஹஜன சம்பத
திகதி 2023/12/31
சீட்டிழுப்பு இலக்கம் 5345
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
Y 5 1 6 9 4 7
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 31/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1693
வெற்றி எழுத்து அதிர்ஷ்ட இலக்கம் வெற்றி இலக்கங்கள்
P 26 05 29 54 66
25564

ஆண்டிறுதியில் இடம்பெற்ற
3 விஷேட சீட்டிழுப்புகளிலும்
கனகலிங்கம் திலகவதி முகவரூடாக
மாபெரும் வெற்றி
◈ 28.12.2023 இடம்பெற்ற Mega 60 சீட்டிழுப்பில் 10 இலட்சம் பணப் பரிசு ஒன்றும் 5 இலட்சம் பணப் பரிசு ஒன்றும் தங்க நாணயம் ஒன்றும் கனகலிங்கம் திலகவதி முகவரின் ஊடாகவும் மற்றும் கனகலிங்கம் சிவகரன் மூலம் 5 இலட்சம் பணப் பரிசு இரண்டு தங்க நாணயம் இரண்டும் வெல்லப்பட்டுள்ளது.
◈ அபிவிருத்தி லொத்தர் சபையின் கபுறுக்க சீட்டிழுப்பில் சில நாட்களுக்கு முன் 20 இலட்சம் முதற்பரிசும் விஷேட சீட்டிழுப்பில் 50000 பணப் பரிசும் வெல்லப்பட்டுள்ளது.
◈ லொத்தர் வரலாற்றில் இடம்பெற்ற மாபெரும் சீட்டிழுப்பான 1000 Mega Million சீட்டிழுப்பில் கனகலிங்கம் திலகவதி முகவரூடாக 10 இலட்சம் பணப் பரிசும் பல 1000 பணப் பரிசும் வெல்லப்பட்டுள்ளது.
◈ மேலும் இந்த ஆண்டு மட்டும் NLB, DLB ஊடாக கனகலிங்கம் திலகவதி முகவரூடாக 11 கோடிக்கு அதிகமான பணப் பரிசும் வெல்லப்பட்டுள்ளது.
என்றும் மக்கள் நம்பிக்கையை வென்ற முன்னணி முகவர் நிலையம் நயினை நாகபூஷணி அமுதசுரபி கனகலிங்கம் திலகவதி என்பதில் ஐயமில்லை.
இன்றே விரையுங்கள்
தொடர்புகளுக்கு:-
முகவரி : இல.4 KKS வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 077 603 1723
இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் கனகலிங்கம் திலகவதி விற்பனை முகவர் மற்றும் விற்பனை உதவியாளர்களின் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

அட கோடீபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2145
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.12.31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.80,029,166.40
வெற்றி இலக்கங்கள் 07 53 62 73 L
557589
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 03 12 22 50 70
1495 மஞ்சள் 2023.12.31 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 486,094,476.20
DLB DEVELOPMENT LOTTERIES

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4031 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.12.31 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 14 31 47 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,224,940.40
917821
DLB

சசிரி SASIRI
வெற்றி வாரம் 422
சீட்டிழுப்பு திகதி 2023.12.31
கபிலம்
வெற்றி இலக்கங்கள் 18 | 25 | 30
07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,631,320/-
DLB

சனிதா
திகதி 2023.12.31 வெற்றி வாரம் 4480 வர்ணம் இளஞ்சிவப்பு
01 32 37 46 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,527,207.20
78979
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2319 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.31 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 25 49 72 74 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,361,480.80
52309
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபர தென சம்பத
31.12.2023 வெற்றி வாரம் 053
R 8 6 6 9 8 2
53653
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 25,252,351.20
DLB Web : www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18465)

076 825 7716 (ஆகாஸ்)

வெளிநாடுகளுக்கான
விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.


சகல நாடுகளுக்கான பொதிகள்
5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (18357)



ஆன்மீகப்பயணம்


FEB 24TH TO MARCH 2ND



THIRUVANAMALAI
THANJAVUR TEMPLE
108 SIVALINGA TEMPLE
(PAPANASAM)
9 NAVAGRAHA TEMPLES
CHITHAMPARAM
THIRUVARAGAM TEMPLE

Orange Holidays
More Details please
Contact - Sri Lanka

0094 771818240 +94 (77) 466 2383




(18363)

## தென்னிந்திய யாத்திரை

நாட்கள் : 16 ஆரம்பம் : 18.01.2024

தமிழ்நாடு, கேரளா, பாண்டிச்சேரி, ஆந்திரா, கர்நாடகா ஊடான
யாத்திரை 60 ஆலயங்களுக்கு மேலாக தரிசிக்கலாம்
மேலதிக விபரங்களை கேட்டறியவும்.

## காசி சீரடிபாபா யாத்திரை

ஆரம்பம் : 10.03.2024 நாட்கள் - 15 யாத்திகர் - 15

தரிசிக்குமிடங்கள்

டெல்லி, அட்சயதாம், நாராயணர் கோவில், இந்திராகாந்தி வீடு, இந்தியா கேற், வேறு இடங்களும் பார்க்கலாம். ஆக்ரா,தாஜ்மகால், செங்கோட்டை, மதுரா, கிருஷ்ணஜென்ம பூமி, பிரேம்மந்திரம், அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சயன ஆஞ்சனேயர், நேரு வீடு, சங்கராச்சாரியார் மண்டபம், கயா, முன்னோர்களுக்கு பிதுர்க்கடன் சிரார்த்தம் செய்யும் இடம், புத்தகாய, புத்தாலயங்கள், காசி விஸ்வநாதர், விசாலாட்சி, காலபைரவர் உட்பட 15 இடங்கள் தரிசனம்

மாலை 6.30 இற்கு கங்கா ஆர்த்தி பார்த்தல் காசியில் 3 நாட்கள் தங்கி சீரடி பாபா தரிசனம், சனி சிங்கனாப்பூர், இன்னும் பல இடங்களும் போகலாம். சீத்தாமடி, சீதை பூமியுள் புதையுண்ட இடம், திரியம்பகேஸ்வரர், ஜோதிலிங்கமும் மற்றும் இராமேஸ்வரம் 21 தீர்த்தமாடல்,இராமேஸ்வரலிங்க வழிபாடு (சிவதரிசனம்), நவபாஷாணம், திருப்புலானி, உத்தரகோச மங்கை பார்த்து மதுரை மீனாட்சி தரிசனம் முடித்து சென்னை வருகை.

1 நாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். மறுநாள் நாடு திரும்பல்

பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்

5விமானப் பயணங்கள், 3 வேளை பிராமண சமையல் ஆட்கள் சமைத்த சைவ உணவு, ரீ , கோப்பி, மினரல் வோட்டர், AC வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரேன் கொமட், இணைந்த குளியலறை மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவும் பயணம் முடிய திரும்பி யாழ்ப்பாணம் வரவும் வாகன ஒழுங்கு வசதிகள் செய்து தரப்படும். மேலும் விபரங்களை கேட்டு பதிவு செய்யவும். (18455)

விபரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
T.P - 077 768 0102/ 077 736 2154
E-mail - sriranganathan2601@gmail.com

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✔ ONLINE APPLICATIONS
- ✔ VISA APPOINTMENTS
- ✔ PASSPORT APPLICATION
- ✔ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-8061)

VISA
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-8061)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம் V2 TRAVELS


# மூன்றாம் ஆண்டு நினைவு தினம்



## திரு. பிரான்சிஸ் வின்சென் ட போல்

[ வித்தியா காருண்யன் ]

பிறப்பு 03.04.1938 இறப்பு 01.01.2021

பண்பிலும் பாசத்திலும் ஒளிவிளக்காய்
பாரே போற்றும் பண்பாளனாய்
மக்களுக்கு எல்லாம் தலைவனாய்
தரணி போற்றும் தந்தையாய்
எம் உறவுகளுக்கெல்லாம் ஐயாவாய்
தோளோடு துணைநின்று – எம்
அனைவருக்கும் வழிகாட்டினீர்கள்

இறைபணியிலும் கல்விப்பணியிலும்
அரசியலிலும் சமூகத்திலும் என – நீர்
தடம்பதிக்காத இடங்களே இல்லை
சிறந்த சமூக சேவையாளன், வித்தியா காருண்யன்
எனப் பெயர்மகுடம் சூடி
எம்மவர்க்கு எல்லாம் எடுத்துக்காட்டாய்
நானிலம் போற்ற வாழ்ந்தவர் நீங்கள்.

வருடம் மூன்று முடிந்தாலும்
உம்பெயர் உச்சரிக்காது
எம் நாள்கள் கடந்ததே இல்லை
விண்ணகத் தந்தையின் இல்லத்தில்
அழியா இன்பத்தைப்பெற்று மிளிர
உமக்காய் இறைவனை மன்றாடி
இம் மலரும் ஆண்டிலும்
உம் பாதம் பணிகின்றோம்

(18362)

"றோஸ் கொட்" கடற்கரை வீதி,
முனை– பருத்தித்துறை.
021 226 3129

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.